காஞ்சி

ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை

மலர் 1 இதழ் 36

தம்பி

வெந்த புண்ணில் வேல்...!

கட்டவிழ்த்துக்கொண்டு ஓடிய காளை, பயிரைப் பாழாக்கி, குழந்தைகளைக் குத்திக் குற்றுயிராக்கி அட்டகாசம் செய்வது கண்டு, அதனை மடக்கி அடக்கி, மற்றவர்க்கு ஏற்படக் கூடிய ஆபத்தைத் தடுத்திட வேண்டும் என்று முயன்றவனை, அந்தக் காளை தாக்கிவிட்டு, தப்பித்துக்கொண்டு கனைத்துக்கொண்டு, புழுதியைக் கிளப்பிக்கொண்டு, வாலைத்தூக்கியபடி ஓடுவதைக் கண்டதுண்டா? காளைக்குப் பேசத்தெரியாது; தர்மபுரியில் வெற்றி கிடைக்கப் பெற்ற எக்களிப்பு கொண்ட காங்கிரஸ் தலைவர்களுக்கு, வாய் இருக்கிறது. ஆகவே, வார்த்தைகள் குபுகுபுவெனக் கிளம்புகின்றன; பொழிந்து தள்ளுகிறார்கள்! கேட்டுக்கொள்கிறேன் காது இருப்பதால்; பொறுத்துக்கொள்கிறேன், அவர்களின் போக்கு புரிவதால்; கூறிவைக்கிறேன், உன் கடமையை உனக்கு நினைவுபடுத்த வேண்டும் என்பதால்.

புள்ளிமானை அடித்துத் தின்றிடும் புலி உறுமுவதும், ஆட்டுக்குட்டியைப் பிடித்துக் கொன்றிடும் ஓநாய் கத்துவதும், காட்டிலே. நாட்டிலே, சில வேளைகளிலே அக்ரமக்காரர்கள், சூதுபல செய்து நீதியைச் சாய்த்துவிட்டு, ஆர்ப்பரிப்பதுண்டு. அவர்களின் எண்ணம் எல்லாம் முடிந்துவிட்டது என்பதால். பேதமையான எண்ணம் மட்டுமல்ல. தலை சுற்றும் அளவுக்கு தற்பெருமை ஏறிவிட்டது என்பதும் அந்த ஆர்ப்பரிப்பின் பொருளாகும்.

என்னை எதிர்க்க இனி எவனால் ஆகும்!
எதிர்த்து நின்றவன் என்ன கதியானான் காணீர்!
தாக்கினேன்! தகர்ந்துபோனான்!
பொடிப் பொடியானான் போரிடவந்தவன்!

இவ்விதம் ஆர்ப்பரித்தவர்கள் ஒவ்வொருவரும், தமது வல்லமைபற்றித் தவறான கணக்குப் போட்டுக்கொள்பவர்களே என்பதனை எடுத்துக்காட்டும் நிகழ்ச்சிகள் எண்ணற்றன உள்ளன வரலாற்றுச் சுவடிகளில்! எக்காளமிடுவோர் இதனை நினைவிற்கொள்வதில்லை.

தரம் குறைந்தவர்கள் மட்டுமல்ல, ஓரளவு தரம் உள்ளவர்களுக்கேகூடச் சில வேளைகளில் வெற்றி தந்திடும் மகிழ்ச்சி, போதையாகிவிடுவதுண்டு.

பிறகோர் நாள் வீழ்த்தப்பட்ட ஜூலியஸ்சீசர், களம் சென்று வெற்றி கண்டது குறித்துத் தன் நாட்டவருக்குச் 'சேதி' அனுப்பியபோது, சென்றேன்! கண்டேன்! வென்றேன்! என்று குறிப்பிட்டிருந்தான்—தனது வல்லமையின் அளவுபற்றி அவனுக்கு அத்தனை பெரிய கணக்கு.

ஜூலியஸ்சீசராவது, சென்றேன் — கண்டேன் — வென்றேன் என்றார்! முதலமைச்சர் பக்தவத்சலமோ, சென்றேனில்லை! வென்றேன் காண்பீர்! என்று பேசுகிறார்! பேசுகிறாரா? முழக்கமிடுகிறார்! களம்கூடச் செல்லாமல் — வெற்றிபெற்ற வேந்தர்வேந்தே! வாழ்க உமது வீரம்! வளர்க உமது தீரம்!! என்று வளைந்துபோனவர்கள் சொல்லாரம் சூட்டுகின்றனர்.

காணாததைக் கண்டவர்கள்! என்று பேசிடுவோரும், அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியில் குடைபிடிப்பான் என்றும், திருச்செங்கோட்டையும், திருவண்ணாமலையையும், சென்னை மாநகராட்சிமன்றத் தேர்தலில் மண் கவ்வியதையும் மறந்துவிட்டார்களோ



என்றும், பேசிடும் பொதுமக்கள் உளர். ஆனல் நான் அவர்களைப்போல காங்கிரஸ் தலைவர்களின் ஆர்ப்பரிப்பைக் கண்டிக்கவோ, திருச்செங்கோடு திருவண்ணமலையைக்கொண்டு தருமபுரியைமறைக்கவோ போவதில்லை. தோல்வியை ஒப்புக்கொள்கிறேன் — காரணம் பல காட்டி இது உண்மையில் தோல்வி அல்ல என்று வாதாடப்போவதில்லை; தோல்வி கண்டோம் என்பதனை ஒப்புக்கொள்ளத் தயங்கப் போவதில்லை. கேரளத்தில் கண்ட தோல்வியை மறைத்திட புள்ளி விவரக் கணக்குத் திரைக்குப் பின்னே ஒளிந்து கொண்ட காமராஜர் போல, தருமபுரியில் முன்பு பெற்றதைவிட அதிக வாக்குகள் கழகம் பெற்றிருக்கிறது என்று கணக்குக் காட்டிடும் தந்திரத்தையும் மேற்கொள்ள முற்படவில்லை. ஆமாம்! தோற்றுவிட்டோம்! தோற்கடிக்கப்பட்டோம்! என்பதனைக் கூறிட அச்சம், தயக்கம் கொள்ளவில்லை; தோல்வியை ஒப்புக்கொள்கிறேன்.

தோல்வியை ஒப்புக்கொள்வதுமட்டுமல்ல; அந்தத் தோல்வியைச் சுட்டிக் காட்டி, காங்கிரஸ் தலைவர்கள் பேசிடும் இழிமொழிகள், எடுத்தேன் கவிழ்த்தேன் பேச்சுகள், ஒழித்தே விடுவோம் என்ற மிரட்டல்கள், ஆகியவற்றை, வரவேற்கிறேன்.

நான், எனது கழகத் தோழர்களின் கண்முன்பும் பொதுமக்களுடைய கண்முன்பும், தோற்கடிக்கப்பட்ட கோலத்திலேயே நிற்க விரும்புகிறேன் — அவர்கள் காண—காண்பதனல் பெறவேண்டிய கருத்துக்களைப் பெற்றிட!

வளைந்தவாள்! நொறுங்கிய கேடயம்! பிய்த்தெறியப்பட்ட கவசம்! குருதி கசிந்திடும் வடுக்கள்!—இவைகளைப் பட்டு பீதாம்பரத்தாலோ, இரவல் மினுக்காலோ மறைத்துக்கொண்டு, என் தோழர்களின் முன்பு போலியான ஒரு காட்சிப் பொருளாக நிற்கப் போவதில்லை; தருமபுரியில் காங்கிரசால் தோற்கடிக்கப்பட்டவன் என்ற நிலையை மறைத்துக்கொள்ளாமல் நிற்க விரும்புகிறேன்; அந்த நிலையில் என்னை என் தோழர்கள் காணவேண்டும் என்றும் விரும்புகிறேன்.

காங்கிரஸ் தலைவர்களே! உங்களால் முடிந்த மட்டும், இழிமொழிகளை மாலையாக்கி எனக்களியுங்கள், என் தோழர்கள் என்னை அந்த நிலையிலே காணட்டும்!

அடைபட்டுக் கிடந்த சேற்று நீர், கல் பெயர்க்கப்பட்டு ஒரு துளை தோன்றியதும் அதன் வழியாகக் கிளம்பி வேகமாகப் பாய்ந்தோடி வருவதுபோல, தருமபுரியில் வெற்றி கண்டதால் உங்களுக்குக் கிளம்பியுள்ள எக்களிப்பைக் காட்ட, என்னை ஏசுங்கள்! தூற்றுங்கள்! கேவலமான வார்த்தைகளை வீசுங்கள்! அவைகளை நான் பெற்றுக்கொள்வது மட்டுமல்ல, உம்மால் எனக்கு அளிக்கப்படும் அந்த விருதுகளுடன், நான் என் தோழர்கள் முன்நிற்க விரும்புகிறேன்.

அதிலே எனக்குக் கேவலம் வரும் என்று எண்ணுகிறீர்கள்—மக்களின் மனப்பாங்கு அறியாததால்!

அவைகளைத் தாங்கிக்கொள்ள நான் அஞ்சுவேன் அல்லது கூச்சப்படுவேன் என்று எண்ணுகிறீர்கள்—என்னைச் சரியாகப் புரிந்து கொள்ளாததால்!

நமது அண்ணன் கேவலப்படுத்தப்படுகிருன், தருமபுரியில் கழகம் தோற்றதால், என்பதனை எவ்வளவுக்கெவ்வளவு விளக்கமாகத் தெரிந்துகொள்ளுகிருர்களோ,அவ்வளவுக்கவ்வளவு நல்லது — எனக்குமட்டுவல்ல —கழகத்துக்கு.

இன்று நீங்கள் வீசும் இழிமொழி, நாளைய எதிர் காலத்தை எமக்கு ஒளி நிரம்பியதாக்கிட உதவட்டும்; தெம்பு இருக்கும்போதே திட்டித் தீர்த்துவிடுங்கள்; பொன்னன வாய்ப்புஅல்லவா இது உங்களுக்கு; எமது எதிர்காலம் பொற்காலமாக இருக்கவேண்டுமானல் இப்போது உம்முடைய இழிமொழிகளை நாங்கள் பெற்றுகவேண்டும்; நாராசநடை வல்லவர்களைக் கொண்டு நன்ருகத் தூற்றுங்கள்; எங்கள் உள்ளத்தில் பாயந்திடும் விதமாக! எமது தோழர்களின் கண்கள் குளமாகும் விதமாக! தோல்வி எற்பட்டால் என்னென்ன கொடுமைகள் விளைந்திடும், எவை எவைகளைத் தாங்கிக்கொள்ளவேண்டிவரும் என்ற உண்மையினை உணர்ந்திட!

தேர்தலில் நாம் வெற்றி பெற்ருகவேண்டும், தொடர்ந்து; இல்லையெனில், ஒரு இடத்தில் நாம் தோற்ருலும் நம்மை இழிவாகப் பேசிடவும், இதுதான் முடிவு என்று ஆருடம் கணித்திடவும், பொதுமக்கள் மனதில் பீதி மூட்டிடவும் காங்கிரசின் பெருந்தலைவர்கள் முனைவார்கள் என்று நான் என் தோழர்களுக்கு எடுத்துக் கூறி, அவர்களின் நாடியினை முறுக்கேற்றிவிடுவதனை விட, கழகத்தின் தோல்வியைக்காட்டி, நீங்கள் ஏசஏச, என்னைப்பற்றி இழிவாகப் பேசப்பேச, இடம் பிடித்தான்கள் குடம் குடமாகத் தமது தூற்றல் சேற்றை இறைக்க இறைக்க, என் தோழர்கள், வேதனை அடைவார்கள்; அந்த வேதனையிலிருந்து வெளிக்கிளம்பும் ‘சக்தி’ இருக்கிறதே, அது சாமான்யமானதாக இராது; நான் அதனைப் பெற விரும்புகிறேன். என்னையும் கழகத்தையும் இழிவாகப் பேசி ஏசுவதன்மூலம், என் வேலைப் பளுவைக் குறைக்கிறீர்கள்; என் கழகத் தோழர்களின் உறுதியையும் ஊக்க உணர்ச்சியையும் வலுவாக்கி வைக்கிறீர்கள்; வசவாளர்களே! நீவிர் வாழ்க! வாழ்க! நுமது நாவு நீள்க! நீள்க! உமது தூற்றல் அகராதி பெரிதாகுக! பெரிதாகுக!

ஒரு வெற்றி கிடைத்திட்டால், காங்கிரசார் எவ்விதமாக ஆர்ப்பரிக்கின்றனர் என்பதனைக் காணட்டும்; கழகத்தவர் மட்டுமல்ல, பொதுமக்களும்.

ஒரு தோல்வி கழகத்தைத் தாக்கினல், அதன் விளைவாக என்னென்ன இழிமொழிகளைக் கழகம் தாங்கிக்கொள்ளவேண்டி வருகிறது என்பதனை உணர்த்திட, நான் ஆயிரம் விளக்கம் தருவதைவிட, உம்முடைய ஒரு அரைமணி நேரத் தூற்றல் பேச்சு மிக மிகப் பலன் தருவதாக அமையும், எனவே தூற்றுங்கள், எமது தோழர்களின் இதயத்தைத் துளைக்கும் அளவுக்கு. அவர்களின் கண் கலங்கட்டும், நெஞ்சு பதைபதைக்கட்டும், இரத்தத்தில் சூடு ஏறட்டும்; அது கழகத்தின் எதிர்காலத்தைச் செம்மைப்படுத்தி வைக்கும்.

தருமபுரி தீர்ப்பளித்துவிட்டது! என்கிருர்கள்—பெருந் தலைவர்கள்!!

திருச்செங்கோடும் திருவண்ணமலையும், சென்னை மாநகரமும், தீர்ப்பளிக்கும் திருத்தலங்கள் அல்ல போலும்! அங்கெல்லாம் மக்கள், காங்கிரசைத் தோற்கடித்துக் காட்டியது, தீர்ப்பு அல்லபோலும்! :தருமபுரியில் மட்டுந்தான் தீர்ப்பு தெரிகிறதோ! பந்தாடும் சிறுவனும் கைகொட்டிச் சிரிப்பான்!!

தருமபுரி தீர்ப்பளித்துவிட்டது என்று பேசிடும் காங்கிரசின் பெரியதலைவர் திருவண்ணமலையின்போது என்ன சொன்னர்? திருவண்ணமலை தீர்ப்பு அளித்து

(13-பக்கம் பார்க்க)

காஞ்சி

மலர் 1 18—4—65 இதழ் 36

அப்படியா, ஐயனே!

"ஏழையின் வாழ்வை உயர்த்தாத சுய ராஜ்யம் இருந்தென்ன? அது அழியவேண்டியது தான்!"

இழுத்துக்கொண்டுவா இப்படித் துடுக்குத் தனமாகப் பேசிய ஆசாமியை! நாக்கைத் துண்டித்துவிடுகிறேன் — என்பார் காங்கிரசில் உள்ள காரச் சரக்கு.

இப்படிப் பேசுவதால், சுயராஜ்யமா அழியும் — காங்கிரசா கெடும்; போகட்டும் விட்டுத்தள்ளுங்கள் — என்பார் காந்திக் காங்கிரஸ்காரர்.

பாதுகாப்புச் சட்டப்படி கைதுசெய்யவேண்டும், அழியட்டும் சுயராஜ்யம் என்று சொல்லத் துணிந்த வரை—என்று கூறி, மும்முரமாகிவிடுவார் முதலமைச்சர் பக்தவத்சலம் — அவர்கள்.

ஏழையின் வாழ்க்கையா உயரவில்லை! சொன்னது யார்! நான் ஏழையாகத்தான் இருந்தேன் — ஏழு ஆண்டுகளுக்கு முன்பு — சுயராஜ்ய சர்க்கார் காட்டிய வழிநடந்து இப்போது முப்பது பஸ்களுக்குச் சொந்தக்காரனாகி இருக்கிறேன்; அப்படிப்பட்ட சுயராஜ்யத்தையா அழிப்பது? விடுவேனா! — என்று வீரமே பேசுவார் பேரம் பேசிக்கொண்டு காங்கிரசில் சேர்ந்து கனவானானவர்.

ஆனால் இவர்கள் அனைவரும் திகைத்துப்போவார்கள், ஏழையின்வாழ்க்கையை உயர்த்தாத சுயராஜ்யம் எதற்கு? அழியட்டுமே! என்று பேசியவர் அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் காமராஜர் என்று அறிந்தால்.

அறிந்ததும், "அற்புதம்! அற்புதம்! ஏழை பங்காளர் என்றால் இவருக்கல்லவா தகும்! இவர் கூறிடும் தத்துவத்தின் ஆழம் மகத்தானது, பொருள் பிரமாதமானது, இது எந்த ஏட்டிலும் காணக் கிடைக்காதது — இதைவிடத் தெளிவாக எவர் கூற முடியும் — புரட்சிக்காரர்கள்கூடப் பேசக் கூசுவரே!" என்பார்கள்.

ஏடுபடித்தவர் என்று தம்மைக் காட்டிக்கொள்ள இதுவே நல்ல வாய்ப்பு என்று எண்ணிக்கொள்ளும் காங்கிரசார் கூறுவார், "இப்படிப்பட்ட தீவிரமான கருத்தை இதற்குமுன்பு இருவர்மட்டுமே கூறியுள்ளனர். ஒருவர் பாரதியார், ஜெகத்தினை அழித்திடுவோம் என்றார்; மற்றவர் திருவள்ளுவர், கெடுக உலகியற்றியான் என்றார்; இப்போது நமது தலைவர்!" என்று கூறுவார் வியந்து.

பாரதியாரும் திருவள்ளுவரும் அப்படியா சொன்னார்கள்! — எனக்குத் தெரியாதே — என்று கூறிக் காமராஜர் தாம்கூறியது 'அருட்கவி' போன்றது படித்துத் தெரிந்துகொண்டது அல்ல என்ற கருத்தை வலியுறுத்திவைப்பார்.

காமராஜர் இந்தக் கருத்தைக் கூறியது தருமபுரியில் பெற்ற வெற்றிக்காக நடத்தப்பட்ட சென்னைக் கூட்டத்தில்.

இதிலே மூன்று கருத்துக்கள் உள்ளன என்பர் ஆய்வாளர்.

ஒன்று சுயராஜ்யம் என்ற இனிப்பான பெயரிட்டு விட்டால் மட்டும் போதாது, அதிலே ஏழையின் வாழ்வு இனிப்பாக இருக்கவேண்டும், என்பது.

மற்றொன்று, அதற்கு சுயராஜ்யம் பயன்படவில்லை என்றால் அது அழியட்டும் என்று விட்டு விட்டு, ஏழையை ஈடேற்றும் ஒரு ஆட்சி முறையை அமைக்க வேண்டும் என்பது.

மூன்றாவது, சுயராஜ்யம் கிடைத்து ஆண்டு 17 ஆனபிறகும் ஏழையின் வாழ்வு உயர்த்தப்படவில்லை என்பது.

இனி இந்தப்பேச்சு எழுப்பிடும் அடிப்படைப் பிரச்சினை, ஏழையின் வாழ்வு சுயராஜ்யத்தினால் இது வரை ஏன் உயர்த்தப்படவில்லை என்பது. இந்தக் கேள்விக்கு எந்தவிதமான பதிலையும் காமராஜரின் பேச்சிலே காணமுடியவில்லை.

மகனலோபிஸ் குழுவினரின் ஆய்வுரை தெரிவிக்கிறது, ஏழையின் வாழ்வு சீராகவில்லை, இத்தனை திட்டங்களுக்குப் பிறகும் என்பதனை.

திட்டங்கள் காரணமாகப் புதுப்புது தொழில்கள் அமைந்து செல்வம் வளர்ந்தது, அந்தச் செல்வம் ஒரு சில முதலாளிகளிடமே தங்கி விட்டது என்பதைக் காமராஜரே ஒப்புக்கொண்டிருக்கிறார்.

அப்படிப்பட்ட முதலாளிமார்கள் காங்கிரசின் தேர்தல் செலவுக்காக 98 இலட்ச ரூபாய் அளவு 'நன்கொடை' கொடுத்ததாகத் துரைத்தனமே தெரிவித்துவிட்டது.

விவசாயத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை இருண்டு கிடப்பதாக சர்க்காரின் புள்ளி விவரமே எடுத்துக் காட்டுகிறது.

தொழிலாளர்களின் வாழ்க்கைச் செலவு வளர்ந்து விட்டது. அந்த அளவிலும் வேகத்திலும் அவனுடைய கூலி உயரவில்லை, என்று தொழிற் சங்கத் தலைவரும், பொருளாதார நிபுணர்களும் கூறியுள்ளனர்.

வரிகள் வளர்ந்து விட்டதாலும் விலை ஏறி விட்டதாலும். நடுத்தரக் குடும்பத்தினர் தொல்லைப் படுவதாகவும் சர்க்காரே தெரிவித்து விட்டிருக்கிறது.

இந்த நிலைமைக்குக் காரணம் யார்? இந்த நிலைமை எந்த ஆட்சியிலே ஏற்பட்டிருக்கிறது? காங்கிரஸ் ஆட்சியில்! சுயராஜ்ய ஆட்சியில்.

ஆக ஏழை எவரை நொந்துகொள்வது?ஏழையின் இந்த நிலைமைக்குப் பொறுப்பேற்க வேண்டியவர் யார்? காங்கிரஸ் கட்சியினர். அதன் தலைவர் காமராஜர்! ஆனால் அவரே அல்லவா பேசுகிறார், சுயராஜ்யம் ஏழையின் வாழ்வை உயர்த்தவில்லை என்றுஅவருடைய காங்கிரஸ் கட்சி அல்லவா, ஏழையின் வாழ்வு உயர வழிகண்டறிந்து அதன்படி ஆட்சியை நடத்திச்செல்ல வேண்டும்? முயன்றனரா? இன்னின்ன முறையிலே நடந்துகொள்ளுங்கள் என்று காமராஜராவது

(12-ம் பக்கம் பார்க்க)

?!

வினா-விடை

(1) அணுக்குண்டு தயாரிக்க வேண்டுமென்று காங்கிரசில் சிலர் கருதுகிறார்களா?

வெளிப்படையாகவே சொல்லுகிறார்கள்! ஏன், வியப்பாக இருக்கிறதா! இன்றையக் காங்கிரசின் இயல்பை அறிந்துகொண்டால் இந்த வியப்பு ஏற்படாது. இன்றுள்ள காங்கிரசில் அகிம்சைக்காக வாதாடுபவர்களும் இருக்கிறார்கள்; அணுக்குண்டு செய்தாகவேண்டும் என்று வாதாடுபவர்களும் இருக்கிறார்கள்; இரு சாராருக்கும் உடை, கதர்! இரு சாராரும் காந்தியின் சீடர்களே!

(2) அணுக்குண்டு செய்வதற்காக ஆகும் செலவை இந்தியா தாங்க முடியுமா?

அது, இன்னும் எவ்வளவு கடன், வரிச் சுமைகளை ஏழைகள் தாங்கிக்கொள்ள முடியும் என்பதைப் பொருத்திருக்கிறது. ஒரு வெளிநாட்டு நிபுணர் தந்துள்ள கணக்குப்படி அணுக்குண்டுதயாரிக்கும் அமைப்பை ஏற்படுத்த 2400 கோடி ரூபாயாகுமாம். இது மிகைபடுத்தப்பட்ட கணக்கு என்று லால்பகதூர் கூறியிருக்கிறார். ஆனால் இவ்வளவு தொகைதான் தேவைப்படும் என்று அவர் திட்டவட்டமாகக் கூறவில்லை.

(3) திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் அறிக்கைகள் வெளியிடுவதை சிலர் நையாண்டி செய்வது ஏன்?

கோபுரத்துக் குரங்கு நடத்தும் கோணங்கிச் சேட்டைகளுக்கெல்லாம் என்ன காரணம் என்று அடுத்தபடி கேட்பாய் போலிருக்கிறதே! அவரவர்களின் இயல்பின்படி அவரவர்கள் பேசுகிறார்கள், எழுதுகிறார்கள். தம்மை எவரும் அறிக்கை வெளியிடும்படி கேட்பதில்லையே என்ற ஏக்கம் அவர்களுக்கு இருக்கலாம்! ஏதாவது ஒரு அறிக்கை வெளியிடும்படி கேட்டு அவர்களின் அங்கலாய்ப்பைப் போக்க முயலவும் — வேறு வேலை இல்லை என்றால்.

(4) காஷ்மீர் பிரச்சினை சிக்கல் மிகுந்தது என்கிறார்களே, ஏன் சிக்கலைப் போக்கும் முயற்சியில் இது வரை வெற்றி கிடைக்கவில்லை?

கேள்வியிலேயே பதில் இருக்கிறதே! பிரச்சினையின் சிக்கல் அப்படிப்பட்டது. இதிலே விந்தை என்னவென்றால் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இந்தியப் பேரரசு மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையும் சிக்கலை அதிகமாக்கி விடுகிறது. காஷ்மீர் பிரச்சினை 1949-ம் ஆண்டிலிருந்து கவனிக்கப்பட்டு வருகிறது. இது வரையில் இந்தப்பிரச்சினை சம்பந்தப்பட்ட காரியங்களுக்காக 1000 கோடி ரூபாய்க்குமேல் செலவாகி இருக்கிறதாம்.

(5) இந்தியப் பேரரசின் நிதி அமைச்சர் புதிய வரிச்சுமையை ஏற்றாமலேயே நிதிநிலைத் திட்டத்தைத் தயாரித்திருப்பதைப் பாராட்டக்கூடாதா?

பாராட்டு வேண்டுமா! எதற்கு? புதிய வரிச்சுமை இல்லாததற்கா!! பாராட்டலாம்; ஆனால் புதிய வரிச்சுமை இல்லை என்பதற்காக அல்ல; நிதிநிலைத் திட்டத்தை வெளியிடுவதற்கு முன்பே கலால் வரியைக் கூடுதலாக்கி 8 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கும்படி ஏற்பாடு செய்துகொண்டு விட்டாரே அந்தத் தந்திர புத்தியை வேண்டுமானால் பாராட்டலாம். மக்கள்மீது உள்ள சுமை அதிகமாகி இருக்கிறதா இல்லையா என்பதை விளக்க வேறு எந்த ஆதாரமும் தேடி அலைய வேண்டாம். 1964—65ம் ஆண்டு இந்தியப் பேரரசுக்கு உள்ள வருவாய் எவ்வளவு என்பதை, 1965—66ம் ஆண்டு வருவாயுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் போதும்; உண்மை விளங்கும். 1964—65ல் இந்தியப் பேரரசின் வருவாய், 2124 கோடி ரூபாய்; 1965—66ல், 2353 கோடி ரூபாய். இந்த அதிகத் தொகை யாரிடமிருந்து? மக்களிடமிருந்துதான்! ஆனால் மயக்கமூட்டிய பிறகு பெறப்படுகிறது! இது சாமான்யர்கள் சாதிக்கக் கூடியதா!! இதற்காக வேண்டுமானால் பாராட்டலாம்—வாழைப்பழத்தில் ஊசியைஇறக்கும் வித்தைக்காக!

(6) நடைபெறுவது 'குடிஅரசு!' தெரிந்துகொள்! திருந்திகொள்! என்று ஒரு காங்கிரஸ் பேச்சாளர் எச்சரிக்கைவிட்டுப் பேசினார்? அது பற்றி என்ன கருதுகிறீர்?

நியாயமான பேச்சு என்று கருதுகிறேன். நடைபெறுவது 'குடிஅரசு' என்று சொல்கிறார்களே தவிரக் குடிமக்களுக்கு நலன் காணோமே என்று கருதிக் கவலைப்படுகிறாய் போலிருக்கிறது. காங்கிரஸ் பேச்சாளர் குறிப்பிட்ட 'குடிஅரசு' என்ன இயல்புடையது என்பதை மொரார்ஜிதேசாய் கூறிவிட்டார். காங்கிரஸ் பிரமுகர்கள் பலர் குடிப் பழக்கம் உள்ளவர்களாக இருக்கிறார்களாம். தேசாய் வெளிப்படையாகவே பேசிவிட்டிருக்கிறார். எச்சரிக்கை விட்டுப் பேசிய அந்தக் காங்கிரஸ் பேச்சாளர், தேசாய் குறிப்பிட்ட 'குடிஅரசு'வாக இருக்கக்கூடும்!

(7) ஐந்திணை என்று குறிப்பிடுகிறார்களே? அவை யாவை?

என்ன நண்பரே! தமிழர்க்கே உரிய தனிச் சிறப்பினைப் பற்றி இவ்வளவு சாதாரணமாகக்கேட்டு விட்டீரே! நீண்ட நெடுங்காலத்துக்கு முன்பே தமிழர் தமது நிலத்தின் இயல்பினை ஆராய்ந்தறிந்து, நிலத்தின் இயல்பின் வழி அமையும் வாழ்க்கை முறை பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என ஐந்துவகையாக நிலத்தினைக் குறிப்பிட்டுள்ளனர். அந்தந்த நிலத்திற்கு உரிய (கூடல் முதலிய) ஒழுக்கங்களையும் ஐந்திணை என்று கூறுவர்.

(8) எரிமலை எவ்வாறு தன் நெருப்புக்குழம்பைக் கக்கி வெடிக்கிறது?

எரிமலைக்கு உள்ளே எப்போதும் நெருப்பு இருந்து வருகிறது, வெளியே வருவதற்கான சமயத்தை எதிர்பார்த்தபடி. குமுறிக் குமுறி ஒவ்வோர் சமயம் வெடித்துக்கொண்டு வெளியே நெருப்புக் குழம்பு வருகிறது. இந்தி எதிர்ப்பு உணர்ச்சி பீறிட்டுக் கொண்டு வெளிவந்ததே தமிழகத்தில் ஜனவரி — பிப்ரவரியில் அதுபோல!

(9) கெனியா நாட்டின் தலைவர் இந்தியாவுக்கு நண்பர் என்கிறார்கள் உண்மையா? அப்படியிருந்தும் அங்கு இந்தியர்கள் விரட்டப்படுகிறார்களாமே, ஏன்?

சிரித்துப் பேசிடும் ஒவ்வொருவரையும் 'எமது நண்பர்' என்று சொந்தம் கொண்டாடுவது இந்தியப் பேரரசின் பழக்கம். ஆனால் உண்மையான 'நட்பு' மலரத் தக்கவிதமான முறைகளை மேற்கொள்ளுவதில் பேரரசு பெருஞ் செலவிட்டு நடத்திவரும் வெளிநாட்டுத் தொடர்புத் துறை செம்மையாகப் பணியாற்றுவதில்லை. கெனியா நாட்டு அதிபர் ஜோமோ கெனியாடா, 'எமது நண்பர்' என்று பேரரசு கூறிக் கொள்கிறது. ஆனால் அந்த நட்பு வளரவும், நிலைக்கவும் வழி தேடுவதில் நல்ல வெற்றி கிட்டவில்லை. காரணம், 'ராஜதந்திர'த் துறையிலே திறமை இல்லை என்று நிபுணர்கள் கூறுகிறார்கள் அதனால்தான் கெனியாவில். உள்ள இந்தியர்களை விரட்டும் முயற்சி மும்முரமாகி வருகிறது. கெனியாவில் மொத்த மக்கட் தொகை 8 கோடியே 85 இலட்சம். இதில் இந்தியாவிலிருந்து சென்றுள்ளவர்கள் தொகை 1 இலட்சத்து 82 ஆயிரம்பேர்.

(10) காங்கிரஸ் ஆட்சிக்கு வெளி நாடுகளிலெல்லாம்கூட பெரு மதிப்பு, தெரியுமா? என்று பேசுகிறார், காங்கிரஸ் பேச்சாளர்— உண்மையா?

முதலில், பேசுபவர் உண்மையான காங்கிரஸ்காரர்தானா என்பதைத் தெரிந்துகொள்ளும் நண்பரே! சத்திரத்து வாசலில் நித்தநித்தம் போய் நிற்பவனை மதிப்பார்களா? இப்போது உணவு அமைச்சர் சுப்பிரமணியம் எங்கே போயிருக்கிறார் தெரியுமல்லவா? ஆஸ்திரேலியாவுக்கு! எதற்காக? உணவுப் பொருள் கேட்டுப்பெற! சோற்றுக்கு இந்தக்கதி என்பதைக் காணும் வெளி நாடுகள் காங்கிரஸ் ஆட்சியை மதிக்கவா செய்யும்!

(11) இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்ணோ ரொம்ப ரோஷக் காரராமே! அமெரிக்கா பிரிட்டன் போன்ற வெளிநாடுகளின் உதவி தேவையில்லை என்று கூறிவிட்டாராமே?

ஆமாம், கூறிவிட்டார்! ஆனால் அது அவருடைய ரோஷத்தைக் காட்டுவது என்று வாதாடினால், அதே சுகர்ணோ, இந்தோனேஷியாவில் முன்பு ஆதிக்கம் செலுத்தி வந்த டச்சு அரசிடம் உதவி பெறுகிறாரே, அதற்கு என்ன பெயர்! விடுதலை பெற்ற உடன் வீராவேசமாக இந்தோனேஷியாவிலிருந்தடச்சுதொழில் அமைப்புகளைத் தேசிய உடைமையாக்கிவிட்டார் சுகர்ணோ. அப்போது அவர், மிகப்பெரிய ரோஷக்காரர் என்றுதான் புகழ்ந்தார்கள். இப்போது அதே டச்சு அரசிடம் உதவி கேட்டுப் பெறுகிறார்; அது மட்டும் அல்ல முன்பு தேசிய உடைமையாக்கிக் கொண்ட டச்சு தொழில் அமைப்புகளுக்கான நஷ்ட ஈடுத் தொகையையும் தந்துவிடச் சம்மதம் தெரிவித்துவிட்டார். ஒரு பக்கத்து மீசையை முறுக்கிவிட்டுக்கொண்டு மறு பக்கத்து மீசையை எடுத்துவிட்டால், உருவம் எப்படி இருக்கும். டாக்டர் சுகர்ணோவின் நடவடிக்கை எனக்கு இப்படிப்பட்ட உருவத்தைத்தான் நினைவுபடுத்துகிறது.

(12) கொடுங்கோலாட்சிக்கு ஒரு உதாரணம் கூறுக?

இந்தச் சமயத்திலா ஐயா, உமக்கு இந்தச் சந்தேகம் வந்தது! மெத்த விந்தைதான்! இருப்பினும் இதைக் கேளும்; நாஜி ஆட்சியின்போது, ஹிட்லர் நடத்திவந்த கொடுங்கோலாட்சியின்போது ஒரு முதியவர் இறந்துவிட்டார். அவருடைய குடும்பத்தினர், தமது இல்லத்து முதியவர் பொன்னுலகம் சென்றுவிட்டார் என்று பத்திரிகைகளில் ஒரு அனுதாபச் செய்தி வெளியிட்டார்களாம். மறுநாள் நாஜி துரைத்தனம் அந்தக் குடும்பத்தினரைச் சிறையில் அடைத்துவிட்டது. காரணம்? பொன்னுலகம் இதுதான்-ஹிட்லரின் ஜெர்மனிதான்--என்ற கருத்தை மறுத்து, நாஜி சர்க்காரைக் கேவலப்படுத்தியதாகக் குற்றச்சாட்டு!

(13) மத்திய சர்க்கார் இசைவு தராவிட்டால்கூட, சேலம் இரும்பாலை அமைப்போம் என்று அமைச்சர் வெங்கடராமன் கூறிவிட்டாரே, இப்போது என்ன சொல்கிறீர்?

நானா! என்ன சொல்ல! ரொம்ப மகிழ்ச்சி என்று சொல்லவேண்டியதுதான். ஆனால் கதராரே! அமைச்சர் வெங்கடராமன் அவ்விதம் சொன்ன மறுவாரம், மத்திய இரும்பு அமைச்சர் சஞ்சீவி ரெட்டியார், மாநில அரசுகள் தாமாகவே இரும்பாலை அமைப்பது கடினமான காரியம்; நடைமுறைக்கு ஒத்துவராது; அன்னியச் செலாவணித் தொகை தருவதற்கு இயலாது என்று பேசியிருக்கிறாரே, அதற்கென்ன சொல்கிறீர்?

(14) சதாசர் சமிதியில் சேரச் சொல்லி நண்பரொருவர் என்னை வற்புறுத்தி அழைக்கிறார் சேரலாமா?

சேர விருப்பமில்லை என்று தமிழக முன்னாள் கவர்னர் பிரகாசா கூறிவிட்டார்! அந்தச் சமதியின் செயலாளரே, எதிர்பார்த்தபடி சமிதிக்கு வெற்றி கிட்டவில்லை என்று விம்மி இருக்கிறார். இந்தத் தகவல் தெரிந்தபிறகு, சமிதியில் சேர விருப்பம் எழுகிறதா உமக்கு?

(15) எவ்வளவோ கொடுமை செய்த பிறகும் காங்கிரசை ஆதரித்தார்களே தர்மபுரியில், என்ன சொல்கிறீர்?

என்ன சொல்ல! துகில் உரித்த துச்சாதனன் உடனேயா கொல்லப்பட்டான்? ○

காதலனா? காதகனா?

குழந்தையாகஇருக்கும்போது பூனையைக் கொன்றான்! கொலைக்குக் காரணம்? பூனையின் தோலைப் பதனிட்டு விற்றுப் பணம்பெறுவது.

பிள்ளைப் பருவத்தில் துவங்கிய இந்தக் கொலை ஒத்திகை பெரியவன் ஆனபோது முழுமை பெற்றது. பூனைக்குப் பதிலாகப் பூவையரையே கொன்று குவித்தான். பெண்களைப் பிணமாக்கியதற்குக் காரணம் பணம்தான்! காதலன் என்ற பெயரில் காதகனாக வாழ்ந்த இவன் பெயர் என்ன தெரியுமா? ஹென்றி லாண்ட்ரூ.

பார்ப்பதற்குப் புண்ணியவான் போன்றும் கண்ணியவான் போன்றும் தோற்றமளித்தான். தட்டுமுட்டுச் சாமான் வர்த்தகத்தில் அவ்வப்போது ஈடுபடுவதுமூலம் கிட்டும் வருமானத்தைக் கொண்டு தன் குடும்பத்தைக் கட்டிக் காப்பதாகக் காட்டிக்கொண்டான்.

வழுக்கைத் தலை; நீண்டு வளர்ந்த தாடி; ஆளை விழுங்கும் பார்வை; இவை லாண்ட்ரூவின் அம்சங்கள்!



லாண்ட்ரூவின் வலுவான கரங்கள் இருக்கின்றனவே அவை அற்புத சக்தி வாய்ந்தவை. ஆரணங்குகளை, குறிப்பாகக் காதற் பசியால் வாடிக் கொண்டிருந்த அணங்குகளை வசீகரிக்கும் ஆற்றல் அந்தக் கரங்களுக்கு அமைந்திருந்தன. மந்திரக் கோலாக விளங்கிய லாண்ட்ரூவின்கையசைவிலே மங்கையர்கள் மயங்கினர்; மனத்தைப் பறிகொடுத்தனர்.

தட்டுமுட்டுச் சாமான் வர்த்தகனாக வெளிக்குத் தோன்றிய லாண்ட்ரூ உள்ளுக்குள் பட்டுத் தளிர்மேனியரோடு உறவாடிக் கொண்டிருந்தான். காரிகையரைக் கவர்வது, கலந்து பேசுவதுபோல் அவர்தம் சொத்து மதிப்பைக் கணக்கிடுவது, காதல் கடலில் அவர்களை விழச் செய்து கைப் பொருளைத் தன் காலடியில் கொட்ட வைப்பது; கடைசியில் கொலைபுரிவது—இது அவன் கைவரப்பெற்ற கலையாகும்.

தினசரிகளில் திருமண விளம்பரம் செய்வது மூலம் தனிமையில் வாழ்ந்த தளிர்மேனியரைத் தன்பால் ஈர்ப்பதே அவனுடைய தொழில் தந்திரம். விளம்பரத்திற்குப் பின் வந்து குவியும் கடிதங்களை வரிசைபடுத்திக் குறிப்பெழுதும் முறை இருக்கிறதே அதுவொரு விசித்திரம்! சொத்து மதிப்பு அடிப்படையில் கடிதங்களுக்குக் குறிப்பெழுதப் பட்டது.

'பி. ஆர்,' என்றால் 'தொகை கொஞ்சம்' என்று பொருள். 'எஸ். எஸ்.' என்றால் 'பின் தொடர வேண்டியதில்லை' என்பதாகும். 'நோ. எப். ஆர். ஏ. எப்.' என்றால் சொத்தில்லை; ஆகவே பயனில்லை' என்று பொருள், இதர சில குறிப்புகள் வருமாறு: 'உடனே பதில் கொடுக்கப் பட வேண்டும்.' 'முதற் பதில்' சொத்து சந்தேகம்.

குறிப்பேடாகப் பயன்பட்ட சுவடியில், குடும்பத்திற்குக் கொடுத்த தொகை, கிடைத்த தொகை; செலவழித்த தொகை முதலிய விவரங்களையும், தன்னிடம் மயங்கியபெண்களைப் பற்றிய வருணனைகளையும் லாண்ட்ரூ எழுதிவைத்திருந்தான். ஒரு பெண்ணைப் பற்றிய குறிப்பு வருமாறு:

"மர்ஜொரீ: விறைப்பானவள்: முறையாக நடப்பவள்; வழக்குரைஞனாக இருக்கும் சகோதரனைப்பற்றி எப்போதும் பெருமைப்பட்டுக் கொள்பவள்; சாக்லேட் தின்பதில் விருப்பமுடையவள்; அளவுக்குமீறி எச்சரிக்கையாக இருப்பவள்."

பிற பெண்களை வருணிக்க எழுத்தைப் பயன்படுத்திய லாண்ட்ரூ தன்னையும், தன் குடும்பத்தினரையும் வருணிக்க எண்களைப் பயன்படுத்தினான். லாண்ட்ரூ தான் "நம்பர் ஒன்." அவன் மனைவி 'எண் இரண்டு', பிள்ளைகளின் எண்கள் மூன்று நான்கு ஐந்து ஆறு. தன்னிடம் கருத்திழந்த பெண்களை எல்லாம் கொன்று ஒழித்த அவன், ஒருத்தியின் உயிருக்குமட்டும் உலை வைக்கவில்லை. அவன் ஆயுள்முழுவதும் அவள் ஆசை நாயகியாக இருந்தாள். அவளுடைய எண் ஏழு.

தன் குடும்பத்தினரை வாய் திறக்கவிடாமல் வைத்திருந்தது லாண்ட்ரூவின் தனித்திறமை. வெளிக்குத் தோற்றமளிப்பதைப் போன்றவர் அல்லர் தங்களுடைய தந்தை என்பதை, அவன் பிள்ளை

(10-ம் பக்கம் பார்க்க)



கோபம்!

குப்பத்துச் சுப்பனுக்குக் கொள்ளைக் கோபம்,
குடித்திட்ட கூழதுவும் வேகவில்லை,
கடித்திட வெங்காயம் தானுமில்லை
கேட்டதற்குக் குப்பிதந்தபதிலிலே
உப்பில்லை, சப்பில்லை, ஒப்பவில்லை.
மாடாக நான் உழைத்து வீடுதேடி
மண் தின்னத்தான் வரவேண்டுமோடி
வரவர உன் புத்தியுமே பாழாய்ப்போச்சி
வாயினிலே வந்ததென்ன புத்துதானோ?

வெண்ணெய் உருக்கினது
வேலை வெப்பம் தீர்த்துவிடும்,
இன்னும் இரண்டு கரண்டி
போட்டுச் சாப்பிடுவீர்!
இன் மொழி இதனைக் கேட்டு
எரிச்சல் மிகவும் கொண்டு,
என் ருசியை நானறிய
இருக்குதெனக்குப் புத்தி கொஞ்சம்,
எனக் கோபம் காட்டுகிறார்
எல்லம்மாவின் கணவர்.

சுற்றி வந்த அலுப்பதனால்
சூடாகப் பேசுகிறார்
குப்பத்து ஆட்களுந்தான்
தப்பேதும் செய்தனரோ?
எப்பாடு படுகின்றார்
இராப்பகலாய்ப் பாவம்,
எல்லாம் நம் குடும்பம்
ஏற்றம் பெறுவதற்கே.
உருசி எதிலே இவர்க்கு என்று
கண்டறிய வேண்டுமினி.
இஞ்சி பச்சடியோ எலுமிச்சம் பழச்சாறோ
உருளை வறுவலோ, கருணை கூட்டதுவோ,
மோர் குழம்பும் வடையும்
மொச்சை மசியலுமோ
வெண்டையோ முருங்கையோ
பிஞ்சுக் கத்திரியோ
ஏதவர்க்கு ருசி தருமோ
இனி நாம் கண்டறிவோம்.
எல்லம்மாள் இந்தவிதம்
எண்ணமிட்டாள்.

அவர் 'ருசி'யை அவள்
அறிய முடியுந்தானோ?!

கருத்த மேனியது
உழைப்பால் மெருகேறி
கந்தலாடையது இளமைக் குறிகாட்ட,
மடுவில் குளித்தவளும்
மானாக ஓடுகிறாள்
மார்பைத் துளைத்திடுது
மாபாவம் தரும் எண்ணம்.
எப்படியேனும் இவளைக்
கைப்பிடித் தாகவேண்டும்,
ஆசை நோய் வளருமானால்
ஆள் உருகிச் சாவாராம்,
ஆகையினால் உயிர்ப்பிச்சை
அவளாலே பெறவேண்டும்
எத்தனையோ பெரிய
இந்த உலகமதில்
என்போல்வார் இல்லையோ
எவ்வளவோபேர்; வல்லோர்.
இந்தவிதமாக எண்ணமிட்ட
கண்ணப்பர்.

ஆனமட்டும் பார்த்திடுவேன்
மாந்தோப்பு வேலையை நான்
ஆள் கூட்டிக் கொண்டுபோய்
அறுவடைதனைக் கவனி
மாடு கன்னு பார்த்திடட்டும்,
மாரியா? பெயரென்ன? குப்பி!

ஏற்பாடு இது என்று கண்டானா
சுப்பனவன்; காற்றானான்.
சுள்ளிகளைப் பொறுக்கிச்
சொகுசாகக் கட்டாக்கி
வாலைப் பருவத்தால் வந்திடும் குலுக்குடனே
குப்பி நடை நடந்தாள் வீடு போக.

ஓகோ கோ! நடப்பதிது
எத்தனை நாட்களாக?
உனக்காகத்தானோ
மாந்தோப்பும் அதில் உளதும்!
கண்ணப்பர் கேட்கின்றார்;
கடுங்கோபம்; கண்ணில் இல்லை!
போ! போ! அக்குடிசையிலே
போட்டுவிடு சுள்ளிகளை என்றார்.

இப்படி ஆகுமென்று அறிந்திருந்தால்
குனிந்து குனிந்து சுள்ளி
குவித்திருக்க மாட்டேனே
செல்வம் குவித்திருக்கும்
சீமான் இவருக்கு
என்ன குறை வந்துவிடும்
இந்தச் சுமை போனால்!
சுள்ளியுடன் கவலையையும்
சுமந்துசென்று குப்பி
குடிசையிலே போட்டுவிட்டு
குறை மனதாய்த் திரும்புகையில்,
பச்சைச் சிரிப்புடனே ஆங்கு
நிற்கின்றார் கண்ணப்பர்.
வந்தது மோசமென்று
வண்டாடு விழியாள்
கண்டுகொண்டாள்; கடுங்
கோபம் அவளுக்கு.
கால் தட்டிவிடலாமா காட்டுக்
கூச்சலிடலாமா,
கட்டையால் தாக்குவதா
கல் வீசிக் கொல்லுவதா
என்ன செய்திப்போது இம்சையைத்
தடுப்பது நான்; என்று
ஏதேதோ எண்ணுகிறாள் குப்பி;
கதிரவனோ மறைகின்றான்.
ஊருக்குப் பெரியவராம்
உண்மை நீதி அறிந்தவராம்,
ஏருக்கு மாடாக உழைக்கும்
ஏழைக்குக் கூற்றாவார்.
பெண்பித்து கொண்டலையும்
பேயனெனத் தெரிந்திருந்தால்
பொன் விறகு கிடைத்தாலும்
புகுவேனோ மாந்தோப்பு!
பாம்பு சீறுமுன் பசும்புல்
வெளியதுவும் பாங்குதான், அதுபோல
பாவி இப்பார்வை காட்டுமுன்னே
என் தந்தைபோல் தெரிந்தார்.

குப்பியைத் தொட்டிட
அவர் நெருங்குகிறார்
தப்பிடுவது என அவள்
தாவுகிறாள்

ஒருபிடி! ஒருதள்ளு! அடப்பாவி!
குப்பி! குப்பி! இவ்வளவே!!

பாய்ந்தோடுகின்றாள் பதைத்து
சாய்ந்துகிடக்கிறார் சீமான்.
இதுநடந்து ஆயின நாட்கள்
இரண்டு.

மூச்சுவிடவில்லை குப்பி; பயம்
மூளையைக் குழப்பியது.
கண்ணப்பர் ஊரில் இல்லை
கழுகுமலை சென்றிருந்தார்
சொன்னால் கணவன் நம்புவானோ
சொகுசு உனக்கேன் என்பானோ
எடடி அரிவாள் அவன்தலையை
எடுத்து வருகிறேன் என்பானோ
எத்தனை விபத்து வந்திடுமோ
என்றஞ்சி வாயும் திறக்கவில்லை.
இந்நிலையில் கூழுந்தான் வேகுமா
கொடுத்திட வெங்காயமும் கிடைக்குமா!
கோபம் கொதித்தது குப்பிக்கு
யார்மீததனைக் காட்டிடுவாள்?

சூது செய்தவன் மாளிகையில்;
இவளிருப்பதோ குப்பத்தில்!
பெத்தவன் மீதே குப்பி
மெத்தவும் கோபம் கொண்டாள்
எத்தனை சொல்லியும் கேட்கவில்லை
இந்நிலைக்கவனே காரணமாம்!
ஊழியம் செய்திங்கு பிழைப்பதிலே
உண்டோர் ஆயிரம் கேடப்பா!

உதவிடு பணம் ஒரு முன்னூறு
வாங்குகிறேன் பசு பசி போக்க,
பாலும் மோரும் விற்றிடுவோம்
பாவியிடம் போய் பணிபுரியோம்
அந்தப்பணம் அவர் தந்திருந்தால்
இந்தக்கதியும் வந்திடுமா?
இந்தக் கோபம் குப்பிக்கு!
தினமறியாக் கோபம் சுப்பனுக்கு
பறிக்கச் சென்றவர் முள்கண்டார்
பதறிச் சீறினார் கண்ணப்பர்.

ஒரே வெட்டு! வீழ்ந்துவிட்டான்
என்றே கூறி

ஓடோடி வீடு நுழைந்தான்
சுப்பன் அரிவாளோடு!
அய்யய்யோ! யாரை நீ
கொன்று போட்டாய்?
காமவெறிப்பேய்
கண்ணப்பனையா?
பதறிக்கேட்டிடும் குப்பிக்கு
சுப்பன் கூறிடுவான் பதிலும்.
கண்ணப்பர் தங்கக்கம்பி
தாக்கவந்தான் சொக்கனுமே
கடனும், வழக்காம், ஏதேதோ
கோபம் வெறி அவனுக்கு.
பக்கமிருந்தேன் குப்பி! நான்
பாவியைத் தீர்த்துப் போட்டுவிட்டேன்.
எதை எண்ணி அழுவாள் குப்பியுமே
எத்தனை தாங்கும் அவள் மனமும்?
கொலையாச்சே; போலீஸ்? என்றாள்
தொலைதூரம் ஓடிப்போவேன் என்றான்.
ஆறு ஆண்டுகள் கடுங்காவல்
அளித்தார் நீதிமன்றத்தார்.

சிறையில் சென்று பார்த்திடுவாள்
சித்தம் உருகி அழுதிடுவாள்,
சந்தியசந்தர் எஜமானர்
காப்பாரென்றவன் தேற்றிடுவான்.
மாந்தோப்பில் முன்போல்
வேலை செய்தால்,
மகராசன் வார்த்திடுவான்
கஞ்சி என்றான்
எப்படி அவள் உண்மை செப்பிடுவாள்?
ஒப்பிடுமா அங்கு வேலைசெய்ய.
ஆலையில் கூலி கிடைத்திடுமாம்
ஆறுமுகம் சொன்னார் சேருகிறேன்
எனக்கூறினாள் குப்பி; சென்னை
வந்துவிட்டாள்.
கோபம் மிக்கொண்டான் சுப்பனுமே
சோரம் போனாள் குப்பி என்றெண்ணி.
கோபம் அவரவர்
கொள்கின்றார்,
யாரவர்க்குண்மை
கூறுகின்றார்!

7-ம் பக்கத் தொடர்ச்சி

கள் தெரிந்திருக்கவே வேண்டும். ஆயினும் தெரியாதவர் போலவே ஒதுங்கிக்கொண்டனர்.

பெரும் பணம் அடையவேண்டும் என்ற நம்பிக்கையில் கொலைபுரியத் துவங்கினான். ஆனால் சிறு தொகையே அவனுக்குக் கிடைத்தது. பன்முறை பலரைக் கொன்றான். ஆயினும் அற்ப சொற்ப தொகையே அவ்வப்போது கிடைத்தது.

கொலைத் தொழில் மூலம் அவனுக்குக் கிட்டிய மொத்த வருமானம் 3500 பவுன்கள்! ஆமாம் 10,500 மலாயா வெள்ளிதான். நாலாண்டு காலத்திற்கு அவன் புரிந்த கொலைகளில் வெளிக்குத் தெரிந்த எண்ணிக்கை பதினொன்று; ஐயப்பாட்டிற்குட்பட்டவை பலப்பல!

பலியானவர்களின் சடலங்களை அவன் எப்படி அப்புறப்படுத்தினான் தெரியுமா? துண்டு துண்டாக வெட்டித் தீக்கிரையாக்கினான். பாரிசுக்கு வெளிப்புறத்தே அமைந்த தன் மாளிகையிலேயே இவ்வாறு செய்தான். பல்வேறு காலங்களில் பல்வேறு இடங்களில் மாளிகையைக் கொண்டிருந்தான். மாளிகை விட்டு மாளிகை மாறிக் கொண்டிருந்ததற்குக் காரணம் மூக்கைத் துளைக்கும் நாற்றத்தைப் பொறுக்க முடியவில்லை என்று அண்டை வீட்டார் புகார் செய்ததுதான். புகைபோக்கியே காரணம் என்று லாண்ட்ரூ பதில் கொடுத்தான்.

மாளிகை அமைந்திருந்த மனைக்கட்டில் மூன்று நாய்கள் புதைக்கப்பட்டிருப்பதைப் போலீசார் கண்டு பிடித்தனர். லாண்ட்ரூவிடம் உயிரைப் பணயம் வைத்த ஒரு நாரி மணிக்குரியதே அந்நாய்கள். அவற்றைச் சாகடித்தது தானேஎன்பதை அவன் ஒப்புக்கொண்டான். ஆனால் அவற்றிற்குரியவரின் வேண்டுகோளுக் கிணங்கவே அவ்வாறு செய்ததாகச் சாதித்தான். நாய்களுக்குச் சொந்தக்காரி நெருப்பின் நாவுக்கு இரையானதை அவன் சொல்லிக்கொள்ளவில்லை.

இந்த மாளிகைத் தோட்டத்தில் ரோஜாக்கள் நிறைய மலர்ந்திருந்தன. முதலில் கட்டித் தழுவியும் முடிவில் வெட்டி அழிக்கவும் செய்த நடுத்தர வயது நாரிமணிகளின் உடலைவிட அந்த ரோஜாவின் பூவிதழ்கள் அவனுக்கு மென்மையாகவும் மிருதுவாகவும் இருந்தன!

கொலையைக் கலையாகக் கொண்ட லாண்ட்ரூ கடைசியில் பிடிபட்டான். இரண்டு விதவைகளின் திடீர் மறைவு குறித்துப் புலன் விசாரணை மேற்கொண்ட இன்ஸ்பெக்டர் பெலினுடைய சந்தேகப் பார்வை லாண்ட்ரூமீது விழுந்தது.

இது குறித்து உள்ளூர் உறவினரை விசாரித்துக் கொண்டிருந்த பெலினுக்கு அரியதோர் வாய்ப்பு கிட்டியது. லாண்ட்ரூவிடம் பலியான ஒருத்தியின் சகோதரி வீதியில் சென்ற அவனை அடையாளங் காட்டினாள். பின்னர் குற்றத்தை நிரூபிப்பது நேரத்தைப் பொருத்ததாக அமைந்தது.

காதலர்களின்பெயர்களை ஒருவன் குறித்து வைத்திருப்பதைப்போல தன்னால் கொலைவாய்ப்பட்ட பெண்களின் பெயர்களைக் குறித்துவைத்திருந்தான் லாண்ட்ரூ. பெலினுடைய பார்வையில் அந்தச் சுவடி பட்டபோதுதான் லாண்ட்ரூ வழக்கின் தன்மையே அவருக்குப் புலப்பட்டது 11 பெயர்கள் அதில் குறிப்பிடப்பட்டிருந்தன. அதோடு, அறுப்புக் கொட்டகைக்கு அவசியமான ரம்பங்கள், அரிவாள், வெட்டுக் கத்தி, கொக்கி, தொட்டி, கத்தரிக்கோல் முதலியனவாங்கப்பட்டிருந்த விவரமும் அதில் இருந்தது.

நீண்ட நெடுவழக்கு விசாரணைக்கும் பின் அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. காதலை நாடிய காரிகையரை 'சாவுலகு'க்கு அனுப்பிய காதகன் — குலை நடுங்காமல் கொலைத் தொழில் நடத்திய மாபாதகன்—1922ம் ஆண்டு பிப்ரவரி 25-ம் தேதி சிரச்சேதம் செய்யப்பட்டான்,

✻

இந்தி எதிர்ப்பு

இந்தி எதிர்ப்புத் தியாகிகளின் உடல் — தமிழ் மணந்து வெந்து கொண்டுருக்கிறது தமிழ்நாட்டில்.

தமிழ் மானம், இரண்டு மந்திரிகளை இந்திப் பிடியிலிருந்து வெளியேற்றியது.

இந்தி மாயை இப்போது பக்தவத்சலத்தின் உள்ளத்தையும் சுடுகிறது.

தியாகிகளின் எண்ணிக்கை அறுபதைத்தாண்டிவிட்டது. வாக்குகளும் உறுதிகளும், கொட்டிவிடப்பட்ட குருதிக்கு ஈடாகமாட்டா.

காங்கிரஸ் — இந்தி என்றும், தி. மு. க. — தமிழ் என்றும் நினைக்கும் அளவுக்கு நிலைமை வந்துவிட்டது.

பக்தவத்சலத்தின் எதிர்காலம் இருண்டுவிட்டது.

பச்சைத் தமிழர், இப்போது 'நச்சுத் தமிழன்' என்று மாணவர்கள் மட்டுமல்ல, தமிழகமே கூறுகிறது.

மானமுள்ள ஒரே வழி — மொழிக்காக வெறுங் கௌரவத்தைக் கைவிட்டு வெளியேறுவதுதான்.

தமிழகத்தின் மூலைமுடுக்குகளிலிருந்தெல்லாம் மாணவர்கள்புற்றீசல் போலக் கிளம்பி, இந்தித் திணிப்பைத் தீவிரமாக எதிர்த்து வருகின்றனர். இந்தித் திணிப்பினால் தங்கள் எதிர்கால முன்னேற்றம் தடைபட்டுவிடக் கூடாதென்பதில் மாணவர்களுக்குள்ள அக்கறையும் விழிப்புணர்ச்சியும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் வாயிலாக திட்டவட்டமாக வெளியாகியிருக்கிறது. இதுகண்டு ஆளுங் கட்சியினர் நீங்கலாகத் தமிழக மக்கள் அனைவரும் வியப்படைந்திருக்கின்றனர்.

ஆளும் கட்சியினருக்கோ— அதிலும் ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய அமைச்சர்களுக்கோ — அதிலும் அமைச்சர்களுக்கு நாயகமாக இருந்துவருகின்ற முதலமைச்சருக்கோ, ஆட்சி மொழி இந்தித் திணிப்பை எதிர்த்து மாணவர்கள்நடத்தியபேரணி, உயிர்த்தியாகம் மிதமிஞ்சிய அதிர்ச்சியையும் அளவுகடந்த அச்சத்தையும் தந்திருக்கின்றன.

முதலமைச்சர் பெற்றிருக்கின்ற அதிர்ச்சியையும் அச்சத்தையும் விடப் பலமடங்கு கூடுதலான அதிர்ச்சிக்கும் அச்சத்துக்கும்- அமைச்சரவையை'ஆக்கும்' ஆற்றல் பெற்றிருக்கக்கூடிய காமராசர் ஆளாகியிருக்கின்றார்.

இந்தித் திணிப்புக்கு எதிராகத் தமிழக மாணவர்கள் போர்க் கொடி உயர்த்தியதனால் காமராசர் பெற்றிருக்கக்கூடிய அதிர்ச்சியும் அச்சமும் தமிழகத்தில் ஆங்காங்கேயுள்ள வழக்குரைஞர்கள் சங்கம் இந்தித் திணிப்புக்கு எதிராகக் கொடுத்து வருகின்ற குரலினால் மேலும் கூடுதலாகிவருகிறது.

ஆட்சி மொழி இந்தித் திணிப்புக்கு எதிராக இப்படி ஒரு பிரும்மாண்டமான எதிர்ப்புக் கிளம்பி, சண்டமாருதம் என ஓங்கித் தாக்கும் — அந்தப் பயங்கரத் தாக்குதலைச்சந்திக்க வேண்டிவரும் என்பதைக் காமராசர் கற்பனை செய்து கூடப்பார்த்திருக்கமாட்டார்.

காமராசர் அசைக்க முடியாத நம்பிகையுடன் தீர்மானித்திருந்ததெல்லாம் ஆட்சி மொழி இந்தித் திணிப்புக்கு எதிராக முன்னேற்றக் கழகம் 'துக்க நாள்' கொண்டாடக் கூடும் — 'துக்கநாள்' நிகழ்ச்சிகள் அனைத்தையும் நம்மால் பயிற்சி அளிக்கப்பட்டு உருவாக்கி வைத்திருக்கின்ற 'சூருவளிப் படை'யை ஏவி 'லங்காதகனம்' செய்துவிடலாம் — துணைக்கு வேண்டுமானல் காவல்துறையை அனுப்பிவைத்துச் 'சூருவளிப் படைக்குப் பாதுகாப்புதரச் சொல்லலாம் — நமது 'சூருவளிப் படை'யும் வெற்றி மாலை சூடிக்கொண்டு திரும்பிவிடும் — நாமும் வெற்றிக் களிப்புடன் டெல்லி சென்று இந்தி வெறியர்களிடம் தமது வீரப்பிரதாபங்களைக் கொட்டிக் கடைவிரிக்கலாம் என்பதே ஆகும்.

ஆனல், நிகழ்ந்ததோ வேருகிவிட்டது.

ஆங்கில மொழியே ஆட்சிமொழியாக நீடித்திருக்கக் காலஞ்சென்ற நேரு தந்த வாக்குறுதியை நிறைவேற்றி வைக்கவேண்டும் என்றும், அதற்கான முறையில் அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்யவேண்டும் என்றும், திராவிட முன்னேற்றக் கழகம் எழுப்பிவந்த குரல், தமிழகத்தின் எட்டுத் திசைகளிலிருந்தும் கிளம்பி, உலக நாடுகளின் கருத்தைக் கவர்ந்து நிற்பதைக் காமராசர் காண்கிருர் — அதிர்ச்சியடைகிருர் — அச்சம்கொள்ளுகிருர் — ஆயாசப்படுகிருர்—'இந்தி பேசாத மாநிலம் சென்னை மட்டுமல்ல' என வெதும்பிய மனத்துடன் கூறுவதன் மூலம். 'இந்தித் திணிப்பால் பாதிக்கப்படக்கூடிய தென்னக மாநிலங்களான ஆந்திரமும், கன்னடமும், கேரளமும் எதிர்த்துத் தீவிரமாகக் குரலெழுப்பாமல் இருக்கின்ற பொழுது, தமிழகத்தில்மட்டும் இந்த எதிர்ப்பு ஏன்? — எனக்கு மட்டும் ஏன் தொல்லை தருகிறீர்கள்?' எனக் கேட்காமல் கேட்டிருக்கின்ருர்!

நடு இரவில், வீட்டில் நுழைந்த திருடனை, விழிப்புடன் இருந்தவன் கண்டு 'திருடன்! திருடன்!' எனக் கூவுகிருன்—உறங்கிக்கொண்டிருந்த உடன் பிறந்தார்களின் உறக்கத்தை கலைக்க! திருடன் கேட்கிருன் — 'உடைமை பறிபோனல் மற்றவர்களுக்குந்தானே இழப்பு? உனக்கு மட்டுமல்லவே இழப்பு? மற்றவர்கள் தூங்குகின்றபொழுது நீ மட்டும் ஏன். விழித்துக்கொண்டிருக்கிருய்? மற்றவர்கள் உறக்கத்தைக் கலைக்க, 'திருடன்! திருடன்! என ஏன் கத்துகிருய்?' — என்று. இதுபோலல்லவா இருக்கிறது— காமராசர் 'இந்தி பேசாத மாநிலம் சென்னை மட்டுமல்ல' எனக் குறிப்பிடுவதும்!

காமராசர் கருதுவதுபோல், ஆட்சிமொழி இந்திக்கு எதிராகத் தமிழகம் மட்டுமே கிளச்சியில் ஈடுபட்டிருக்கவில்லை. ஆந்திரத்திலும் இப்போது எதிர்ப்பு எக்காளம் கேட்கிறது! கருநாடகத்திலும் எதிப்புக்

தமிழகத்திலே மூண்டெழுந்த இந்தி எதிர்ப்புக் குறித்து சிங்கப்பூர் தமிழ் மலர் நாளிதழில் வெளிவந்த கட்டுரையின் ஒரு பகுதியை இங்குத் தந்திருக்கிறேம்.

குரல் கிளம்பியிருக்கிறது! கேரளத்திலும் எதிர்ப்பு எதிரொலிக்கிறது!

இத்துணையளவை எதிர்பாராத ஆளவந்தார்கள் இப்போது திணறுகின்றனர்.

மனிதத் தன்மையுள்ள யாரும் இந்தமாதரி வன்செயல்களைக் கண்டிக்காதிருக்க முடியாது.

ஆனால், ஒன்று — இத்தி எதிர்ப்புக் கிளர்ச்சிகளில் மாணவர்கள் என்ற போர்வையில் நகர்ப்பகுதி காலிகளும் புகுந்துகொண்டனர் என்ற உண்மையை யாராலும் மறைக்க முடியாது.

தமிழ் நாட்டில் பயங்கரமும் மிருகத்தனமும் கலந்த கொடுமை முறை கட்டவிழ்த்துவிடப்பட்டது.

தடியடியும், கண்ணீர்ப்புகையும் தங்குதடையின்றி பிரயோகிக்கப் பட்டன.

வேல் கம்பாலும், குண்டாந்தடியாலும் மாணவர்கள் தாக்கப் பட்டனர்!

மாணவர் விடுதிகளில் நள்ளிரவு படையெடுப்பு நடைபெற்றது — கதவுகள் உடைககப்பட்டன— தூங்கிக்கொண்டிருந்த மாணவர்கள் வெளியே இழுத்துவரப்பட்டு தாக்கப்பட்டனர்.

5,000 பேர்களுக்குமேல் சிறையில் தள்ளப்பட்டனர்.

அடக்குமுறை கோரதாண்டவமாடியது!

ஆனால் அந்தச் செயல்கள், இந்தித் திணிப்பால் தமிழ்நாட்டில் எழுந்துள்ள வெறுப்பு — வேதனை — கனல் எந்த அளவில் இருக்கின்றன என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றன

தடியடிகளைத் தந்து — துப்பாக்கிக் குண்டுகளைத் தந்து — கண்ணீர் சிந்தச் செய்து இரத்தத்தைச் சிந்தச் செய்து — எலும்புகளை உடைத்து — இல்லங்களை உடைத்தனர்.

'நாட்டுப் பற்று' என்பது இந்திப் பிரியர்களின் சொந்தச் சொத்து அல்ல; இன்றைக்கு இந்தித் திணிப்பை எதிர்க்கும் அணியில், 'நாட்டுப்பற்று' மிக்கோர் அதிகமாக இருக்கின்றனர்!

உடனடியாகத் தீர்வுகாண வேண்டிய பிரச்சனைகள் பல இருக்கின்றன; உணவுப் பற்றுக்குறை— பாதுகாப்புப் பலம் — வாழ்க்கைத் தரம்—சுகாதாரக் குறைபாடுகள்— எழுத்தறிவில்லாத்தன்மை. ஆகிய பல அவசரப் பிரச்னைகள் அலை மோதிக்கொண்டிருக்கின்றன.

இவ்வளவையும்விட்டு, ஆட்சி மொழியாக இந்தி என்று — நேரத்தையும், சக்தியையும் பொறுமையையும் வீணுக்குவது சரியல்ல!

இந்தி ஆட்சிமொழியாவதற்கு நாடு தயாராகயில்லை—இந்தி பேசாத மக்கள் தயாராக இல்லை—இந்தி மொழியே அதற்குத் தயாராக இல்லை.

ஆங்கிலத்தை நீக்கிவிட்டு இந்தியைக் கொண்டுவருவதற்குக் கண்மூடித்தனமான வெறித்தன்மையும், தவருன தேசிய மனப்பான்மையும் தவிர வேறெதுவும் தகுந்த காரணங்களாக அமையவில்லை.

பழி தூற்றுவது-சத்தற்ற உறுதி மொழிகளைத்தருவது—'மெதுவாகப் போவோம்' என்று பேசுவது— அடக்குமுறையை ஏவுவது—காட்டு மிராண்டித்தனத்தைக்கட்டவிழ்த்து விடுவது—இவற்றில் எதுவும் இந்தி ஏகாதிபத்தியத்தின் கோர உருவத்துக்கு வரவேற்புத்தரும் வசதிகளை உண்டாககித்தராது!

✽

4-ம் பக்கத் தொடர்ச்சி

காங்கிரஸ் ஆட்சியினருக்கு ஒருதிட்டம் — ஒருதாக்கீது தந்ததுண்டா? காணுமே! இவர் செய்திருக்க வேண்டிய காரியத்துக்காக. இவரே வேறு யாரிடமோ முறையிட்டுக்கொள்வதுபோல இருக்கிறதே பேச்சு! எவரிடம் முறையிடுகிருர்! விளங்கவில்லையே!!

ஏழையின்வாழ்வு உயர்ந்திட காங்கிரஸ் வழிகாண வேண்டும் என்று ஆவடியில் திட்டம் தீட்டினுர்களே என்ன ஆயிற்று? புவனேஸ்வரில் அதற்குப் புதுமுலாம் பூசினுர்களே, அதன் பலன்தான் ஏதாகிலும் உண்டா? ஏன் இல்லை? எவர் அதற்குப் பொறுப்பு! ஏழையின் வாழ்வு உயர, இவர்கள் ஏதேனும் திட்டம் கொண்டு வந்து, அதனை எதிர்க்கட்சியினர் எதிர்த்து ஒழித்து விட்டனரா? இல்லையே! முடியாதே!

எதையும் செய்யாமல், இவர் எங்கிருந்தோ, நிலைமையை அறிந்து நல்லுரைகூற வந்திருக்கும் நிபுணர் போலத் தம்மை நினைத்துக்கொண்டு, எதனை நாடு நித்தநித்தம் பேசிப் பேசி ஏக்கத்துடன் இருந்து வருகிறதோ, அதனைப் புதிய கண்டுபிடிப்புபோல ஒரு கூட்டத்திலே பேசிவிடுவது யாருக்கு என்ன பயனைத்தந்துவிடமுடியும்!

காமராஜர் பேசிடும் கூட்டத்தில் கலந்துகொள்ளும் எந்த ஏழையின் மனதிலும், இதுதானே தோன்றியபடி இருக்கிறது. ஏழையின் வாழ்வை உயர்த்தாத சுயராஜ்யம் இருந்தென்ன? அது அழியவேண்டியது தான்! என்று முணுமுணுத்தபடிதானே இருக்கிருன். அதனையே இவரும் பேசிவிடுவதால், அவனுக்குக் கிடைக்கப்போகும் இலாபம் என்ன?

எந்த ராஜ்யமும், ஏழையின் வாழ்வை உயர்த்தத் தவறிவிட்டால், அழிந்துபடத்தான் செய்யும்.

இன்றுள்ள காங்கிரசாட்சியை ஏழையை வாழ வைக்கும் விதமாக மாற்றத் தவறிவிட்டு. ஏழையை வாழவைக்காத சுயராஜ்யம் அழியட்டுமே என்று பேசி விட்டால், பழி வேறு யார்மீதாவது போய்விடட்டும் என்று அவர் எதிர்பார்க்கிருரா?

ஏழையின் வாழ்வு உயராததற்கு முழுப்பொறுப்பு ஏற்கவேண்டியது காங்கிரசாட்சிதான்! அந்த ஆட்சியை இந்தவிதமாக இருந்துவிட இணங்கியும், உடந்தையாக இருந்தும் வருபவர் காமராஜரேதான். ஏழையை ஈடேற்ருத சுயராஜ்ய சர்க்காரிலும் வழி காட்டியாக இருந்துகொண்டு, ஐயோ! ஏழை வாழ வில்லையே! அவனை வாழவைக்காத சுயராஜ்யம் இருந்தென்ன! அழியட்டுமே! என்றும் பேசுவது, கொச்சை மொழியில் கூறுவார்களே, கோழியும் திருடிவிட்டுக் கூடவும் குலாவுவது எனறு அதுபோல இருக்கிறதே; அப்படியா ஐயனே! என்று காமராஜரைக் கேட்க விரும்புகிறேம்.

புண்ணியகோடி என்ற பெயர் இருப்பதாலேயே அவன் 'பாபம்' செய்யவேமாட்டான் என்பதுபோலவும், ஆரோக்கியசாமி என்ற பெயர் இருக்கும்போது அவனுக்கு எப்படி ஆஸ்துமா வரும் எனறு கேட்பது போலவும், ஜனநாயக சோஷியலிசம் எமது திட்டம் ஆகவே ஏழையின் வாழ்வு உயர்த்தப்பட்டுவிடும் என்று கூறிக்கொள்ளும் பேச்சும் பொருளற்றதாகி விட்டிருக்கிறது. இதற்கு ஆதாரம் தேடவேண்டிய தொல்லையைக் குறைப்பதாக அமைந்திருக்கிறது

ஏழையை உயர்த்தாத சுயராஜ்யம்
இருந்தென்ன? அழியட்டுமே!

என்ற காமராஜரின் பேச்சு!

✽

3-ம் பக்கத் தொடர்ச்சி

விட்டது என்று கூறி, கன்னத்தில் போட்டுக்கொண்டாரா, காதைப் பிடித்துக்கொண்டு தோப்புக்கரணம் போட்டுக் காட்டினரா? புத்தி வந்தது புத்தி வந்தது என்று சொல்லித் தலையில் குட்டிக்கொண்டாரா! தெரியுமே பொதுமக்களுக்கு, அவர்கள் காட்டிய போக்கும், பேசிய பேச்சும்!

இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி, மக்களை ஏமாற்றி, கழகம் வெற்றிபெற்றுவிட்டது என்றார்.

கழகம் வெற்றிபெறும் போதெல்லாம், 'இல்லாததும் பொல்லாததும் சொல்லிப் பெற்ற வெற்றி! காங்கிரசுக்கு வெற்றி கிடைத்தால் அது தீர்ப்பு! நாக்குதானு அவர்கள் பேசப் பயன்படுத்தும் கருவி!

தருமபுரியில் காங்கிரஸ் வெற்றிபெற்றது 'தீர்ப்பு' என்றால் திருச்செங்கோட்டிலும் திருவண்ணுமலையில் கழகம் வெற்றி பெற்றதும் 'தீர்ப்பு'தானே!

திருச்செங்கோடு, திருவண்ணுமலை 'தீர்ப்புகளை' மதித்து காங்கிரஸ்கட்சி என்ன காவி உடுத்திக் கமண்டலம் எடுத்துக்கொண்டு காடேகிவிட்டதா! இல்லையே! போனல் போகட்டும், மற்றோர் சமயம் பார்த்துக்கொள்வோம் என்று இருந்துவிட்டது. இந்த இலக்கணம் எல்லோருக்கும் பொதுதானே! அப்படியிருக்க, தருமபுரியில் கிடைத்த வெற்றியால் மட்டும், ஏன் அவர்கள் தீர்ப்பு! தீர்ப்பு! என்று நாவாட, தலையாட, நாற்காலி மேஜையாட, ஒலிபெருக்கி உடனுட உரையாற்றுகின்றனர்? காரணம் இருக்கிறது; தம்பி! காரணம் இருக்கிறது.

அவர்களுக்குத் தாங்கள் குற்றம் செய்திருக்கிறோம் என்ற அச்சம் நிரம்ப இருந்திருக்கிறது.

நமது குற்றம் வெளிப்பட்டுவிடும்; தண்டிக்கப் பட்டுவிடுவோம்! என்ற அச்சம் இருந்திருக்கிறது.

மறுக்க முடியாததும், மறைக்க முடியாததுமான குற்றங்களைச் செய்துவிட்டிருக்கிறோமே, மக்கள் எப்படி அவைகளை மறந்துவிடுவார்கள், எப்படி மன்னித்து விடுவார்கள், நிச்சயமாக நம்மைத் தண்டிக்கத்தான் போகிறார்கள் என்ற திகில்கொண்ட நிலையிலேதான் அவர்கள் தருமபுரி வந்தனர்.

ஆனல், தருமபுரியில் வெற்றி அவர்கட்கு என்றதும், அவர்களால் அதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை; சந்தேகத்துக்கு இடமற்ற தன்மையில் குற்றம் மெய்ப்பிக்கப்படவில்லை என்ற காரணம் காட்டி, கொலையாளி விடுதலை செய்விக்கப்பட்டால், அவனுக்கு ஏற்படும் மகிழ்ச்சிக் கொந்தளிப்பு எப்படிப்பட்டதாக இருக்கும்; அந்த நிலையில் உள்ளனர்! நல்லதீர்ப்பு! நல்ல தீர்ப்பு! என்று பாடுகின்றனர். நாங்கள் வென்றோம்! நாங்கள் வென்றோம்! என்று ஆர்ப்பரிக்கின்றனர்.

தருமபுரியில் அவர்கள் வெற்றியை எதிர்பார்க்கவில்லை; வெற்றிக்கு உரியவர்கள்தாமல்ல என்ற எண்ணம் அவர்களிடம்.

அந்த நிலையில் வெற்றி என்று ஏற்பட்டதும், அவர்களால், நிற்க முடியவில்லை, நினைத்துப் பார்க்க முடியவில்லை, வாயைத் திறக்கிறார்கள், வார்த்தைகள் உருண்டோடி வருகின்றன,

"இவன்தான் களவாடினன் என்பதற்குப் போதுமான சான்று இல்லை; மெய்ப்பிக்கப்படவில்லை" என்று தீர்ப்பளித்தார் நீதிபதி.

குற்றக் கூண்டிலே நின்றவன் மகிச்சிப் பெருக்கடைந்தான், தன் நிலையையும் மறந்தான்,

> "அப்படியானல் அந்தத் தங்கச்
> சங்கிலியை நான் திருப்பித்தர
> வேண்டியதில்லையே"

என்று கேட்டுவிட்டானும், தீர்ப்பளித்த நீதிபதியே, தான் எவ்வளவு பெரிய தவருன தீர்ப்பளித்து விட்டோம் என்பதை உணர்ந்து திகைத்திடத்தக்க விதமாக

அவன் விவரமறியாத குற்றவாளி! காங்கிரஸ் தலைவர்கள் எல்லாத் திறமையும் பெற்றவர்களாயிற்றே ஆகவே குளறிக் கொட்டவில்லை, தீர்ப்பு பிரமாதம் என்று பேசித் திருவிழா கொண்டாடுகிருர்கள்.

தருமபுரியில் மட்டுமல்ல, எத்தனையோ இடங்களில் எத்தனையோ தடவைகளில், எத்தனையோ விவரமறிந்தவர்கள்கூட மெய்போன்ற பொய்யை ஆதாரமாகக் கொண்டு தவருன தீர்ப்பு அளித்து விடுவதுண்டு.

> கள்வனைக் கொண்டுவா! என்று கூற
> வேண்டிய மாமன்னன் கள்வனைக்
> கொன்று வா!

என்று கூறியபோது, மன்னன் தீர்ப்பு-நீதிநெறி வழுவாத மன்னன் தீர்ப்பு—செங்கோல் வளையாச் சிறப்புடையான் தந்த தீர்ப்பு என்றுதான் அவையோர் கருதினர், கோவலனைக் கொடுமைக்கு இரையாக்கிய கெடுமதியாளன், "இஃதன்றோ நல்ல தீர்ப்பு" என்றுதான் பெருமிதத்துடன் கூறியிருப்பான்.

உண்மையான தீர்ப்பு பிறகல்லவா கிடைத்தது. ஒற்றைச் சிலம்பேந்திய கண்ணகி சிலம்பினை உடைத்து உள்ளே உள்ள பரல்களைக் காட்டி, தன் கணவன் குற்றமற்றவன் என்பதனை மெய்ப்பித்த போது!

எனவே, திருவண்ணுமலையையும் திருச்செங்கோட்டையும், சென்னை மாநாகரையும் தீர்ப்பளிக்கும் தகுதி பெற்ற இடங்களல்ல என்று கருதிக்கொண்டு, தருமபுரி மட்டுமே தீர்ப்பளிக்கும் இடம் என்று காங்கிரசார் கூறினலும்—அது சொத்தை வாதம்—அளிக்கப்பட்ட தீர்ப்பு, முறையானதுதான் என்றே முடிவானதுதான் என்றே கூறி விடுவது எங்ஙனம் பொருந்தும்?

தரப்பட்ட ஆதாரங்களைக் கொண்டும், காட்டப்பட்ட சான்றுகளை நம்பியும், எடுத்துக் கூறப்பட்ட வாதங்களைச் கொண்டும், தருமபுரி மக்கள் அந்த விதமான தீர்ப்பு அளித்துவிட்டனர்.

இதனலே நான் தருமபுரி மக்கள் மீது குற்றம் கூறவில்லை; அவர்களின் நேர்மையையும் திறமையையும் சந்தேகிக்கவில்லை; நான் கூறிக்கொள்வது, நாம், வழக்கை எடுத்துரைத்ததிலும், சான்றுகளை விளக்கியதிலும், குற்றத்தை மெய்ப்பித்துக் காட்ட வாதாடியதிலும், தேவைப்படும் அளவு திறமையைக் காட்டாததால் வழக்கின் வடிவம் கெட்டு விட்டது; தீர்ப்பு வேறுவிதமாகி விட்டது என்றுதான் கருதுகிறேன்.

நம்மை நாமே நொந்துகொள்ள வேண்டுமேயன்றி தருமபுரி மக்கள்மீது வருத்தப்பட்டுக்கொள்வது முறையாகாது.

நியாயம் காங்கிரசின் பக்கம் இருந்ததாலும் அல்ல; நீதிபதிகள் தவருன போக்கினர் என்பதாலும் அல்ல,

வழக்கை எடுத்துரைப்பதில் நாம் வெற்றி பெருததாலேயே தீர்ப்பு காங்கிரசுக்குச் சாதமானதாகத் தரப்பட்டுவிட்டது.

இது தோல்வியை மறைத்திடக் கூறப்படும் தத்துவம் அல்ல; நான் தோல்வியை ஒத்துக்கொண்ட பிறகே இதனைக் கூறுகிறேன்; உண்மை நிலைமையினை உவகைக் கூத்தாடும் காங்கிரஸ் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்குக்கூட அல்ல; நமக்கே உண்மை நிலைமை புரியவேண்டும் என்பதற்காக.

பிரசாரத்தில் திறமை மிக்கவர்களாயிற்றே, நீங்களா போதுமான முறையிலே வழக்கை எடுத்துரைக்கத் தவறிவிடுவீர்கள்! என்று நையாண்டி செய்வார்கள்; உணருகிறேன்; நான் கூறுவது, நமது பிரசார முறை செம்மையாக இல்லை என்பது அல்ல; வழக்கு மிகஎளிதானது; சிக்கலற்றது; இதனை விளக்க நாம் அதிகமான முயற்சி எடுக்கத் தேவையில்லை, குற்றம் புரிந்துவிட்டது காங்கிரஸ் கட்சி என்பது பொதுமக்களுக்கு நன்ருகத் தெரியும், ஆகவே, தண்டிக்க முற்படுவர் என்ற நம்பிக்கையை, அளவு கடந்த முறையிலே வைத்துக்கொண்டு தீர்ப்பு நிச்சயமாக நமது பக்கம்தான், இதிலென்ன சந்தேகம், என்ற முனைப்புடன் தருமபுரி சென்ருேம். அதைக் கூறுகிறேன்.

அச்சத்தோடு வந்தவர்கள், குற்றத்தை மறைத்திடத் திறமைகாட்டினர், தமக்கு ஆதரவான தீர்ப்புப் பெற்றுவிட்டனர்.

தீர்ப்பு நம் பக்கம்தான் என்ற நம்பிக்கையை மிக அதிக அளவு கொண்டிருந்ததால், நாம் மெத்தனம் காட்டினேம்; தோற்கடிக்கப்பட்டோம்.

இது தோல்வி அல்ல என்று வக்கணை பேச அல்ல இதனை நான் குறிப்பிடுவது.

இந்தப்போக்கு இனிகூடாது என்ற உண்மையினை நாம் உணர்ந்துகொள்வதற்கு இந்தத் தோல்வி ஒரு பாடமாக அமையட்டும் என்பதற்காக.

உண்மை எது, பொய் எது என்று கண்டுகொள்வது மிக எளிது என்று எண்ணிவிட்டோம்; பலர் அவ்விதம் எண்ணிக்கொள்கிருர்கள். மெய்யும் பொய்யும் கிட்டத்தட்ட குயிலும் காகமும்போல என்று கொள்ளலாம்; பலரால் இதுவா அதுவா என்று எளிதாகக் கண்டுபிடித்துவிடமுடிவதில்லை. அதிலும் பொய் பொன்னுடை அணிந்துகொண்டும், மெய் புழுதிபடிந்த மேனியுடனும் உலா வரும்போது பலருக்கு மயக்கம் — பொய்யின்பக்கம் ஈர்க்கப்பட்டுவிடுகின்றனர்.

நாம், தம்பி! உண்மை நமக்குப் புரிவதால், எல்லோருக்கும் உண்மை புரியத்தானே செய்யும் என்று எண்ணிக்கொள்கிருேம்.

உண்மையின் பக்கம் நாம் இருக்கிருேம் என்பது மட்டும் போதாது, உண்மையின் பக்கம் அனைவரும் வந்து சேரும்படிச் செய்யவும் வேண்டும். அதற்கான முறைகளைத் திறமையாக, செம்மையாகச் செய்தே வெற்றிபெறமுடியும். அதிலே நாம் தவறிவிட்டோம்; காரணம், திறமைக் குறைவு என்று கூடக் கூற மாட்டேன்; உண்மையை உண்மைஎன்று மெய்ப்பிக்க வாதாடவும் வேண்டுமா என்று எண்ணிக்கொண்டு விட்டதால்.

இது எப்படிப்பட்ட அரசு என்பது பற்றியும், இந்த அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் நாட்டு மக்கள் படும் அல்லல்பற்றியும், இந்த அரசு நடத்திக் காட்டிய அடக்குமுறைக் கொடுமைபற்றியும், மக்கள் மிக நன்ருக அறிவார்களே; அப்படிப்பட்ட மக்கள், தேர்தலில் எப்படிக் காங்கிரசை ஆதரிக்க முடியும்! என்று எண்ணிக்கொண்டோம்.

மக்களில், அரசியல் பிரச்சினைகளை அறிந்தவர்கள், இந்த அரசின் இயல்பினைப் புரிந்துகொண்டுதான் இருக்கிருர்கள்; அதிலே எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை.

ஆனல் அரசியல் பிரச்சினைகளைத் தாமே நேரடியாக ஆராய்ந்துபார்த்து முடிவெடுப்பவர்கள் என்று ஒரு பகுதி, மற்றவர் கூறிடும் முடிவினை ஏற்றுக்கொள்ளும் ஒரு பகுதி என்ற முறையில்தான் சமூகம் இருக்கிறது என்பதனை நாம் மறந்துவிடக்கூடாது.

மக்களாட்சி முறையின் மாண்பினை நன்கு உணர்ந்துள்ள நாடுகளில், தாமாகவே அரசியல் பிரச்சினைகளை ஆய்ந்தறிந்து தக்க முடிவினை மேற்கொள்வோரின் அளவு அதிகம்; இங்கு இருப்பதைக் காட்டிலும்.

எனவேதான் இங்கு உண்மைக்காகப் பரிந்துரைக்கும் பணியிலே மும்முரமாக ஈடுபட்டாகவேண்டி இருக்கிறது.

இந்தப் பணி எந்த அளவுக்குத் தேவை என்பதை மறந்த நிலையில் தருமபுரி சென்ருேம்; விளைவு நமக்கு வேதனை தந்துவிட்டது.

இந்த அரசு நடாத்திய அடக்குமுறைபற்றிய கருத்தினைத் தெரிவிக்கும் கடமையைக் காட்டிலும்; இவருக்கா அவருக்கா ஓட்டு என்ற முறையிலேயும், இன்னின்னர் சொல்கிருர்கள் என்பதற்கா, அவர்களெல்லாம் சொல்கிருர்கள் என்பதற்கா? எதற்கு நாம் கட்டுப்படுவது என்ற முறையிலும், தருமபுரி மக்கள் இந்தத் தேர்தலைக் கவனித்தார்கள்.

சுட்டு வீழ்த்தப்பட்டவர்களிடம் இரக்கமற்றவர்களாக, இழப்புக்கு ஆளானவர்களின் வேதனையைத் துடைக்கவேண்டும் என்ற எண்ணமற்றவர்களாக, தருமபுரி மக்கள் இருந்திருக்க முடியாது—எவரும் அவ்விதமானவர்களாக இருந்திடமாட்டார்கள்.

ஆனல் அந்தக் கருத்தைத் தெரிவிக்கும் வாய்ப்பு இந்தத் தேர்தல் என்ற எண்ணத்தைவிட வேறு பல விதமான எண்ணங்களை அவர்கள் கொண்டுவிட்டனர் என்றே தோன்றுகிறது. நாமோ இதயமுள்ளவர்கள் எவரும் இவ்வளவு கொடுமைகளைச் செய்த ஒரு ஆட்சியை நடத்திவரும் கட்சியை ஆதரிக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கையை அளவுகடந்த முறையிலே கொண்டுவிட்டிருந்தோம்.

மக்களுக்கு இயற்கையாக ஏற்படக் கூடிய நீதிநியாய உணர்ச்சி, பரிவுபச்சாதாப உணர்ச்சி ஆகியவற்றினைக்கூட உருக்குலையச் செய்திடும் வல்லமை, காங்கிரஸ் கட்சியினருக்கு உண்டு என்பதை தருமபுரி எடுத்துக்காட்டிவிட்டது.

காங்கிரஸ் கட்சிக்கு உள்ள இந்த வல்லமை, போற்றுதலுக்குரியதாகாது; நச்சுப்பை கொண்டுள்ளதற்காகப் பாம்பினைப் பாராட்டுவார் இல்லை.

நாம் செய்த தவறு, காங்கிரஸ் கட்சி இந்த நச்சு பரப்பிடும் செயலுக்கேற்ற திறமை பெற்றுள்ளது என்பது பற்றி அறிந்துகொள்ளாதது என்றும் கூறுவேன்,

நாமோ குற்றம் செய்துவிட்டோம்; மக்களோ நம்மை மன்னிக்கமாட்டார்கள், தண்டிக்கத்தான் போகிறார்கள் என்ற அச்ச உணர்ச்சியால் உந்தப்பட்ட காங்கிரஸ் கட்சி, இரண்டு திங்கள், ஒரு சிற்றூர் விடாமல் தமது பணியாளர்களை ஏவி, மக்கள் மனதிலே இருந்து வந்த கொதிப்பை மாற்றவும், அவர்கள்முன் வேறு பிரச்சினைகளை வைக்கவும் முனைந்து வந்தபோது கழகம் அதனைப் பெரிதாகக் கருதவில்லை, தடுத்திடவும் முனையவில்லை.

முதலிலே அறிவிக்கப்பட்ட தேர்தல்நாள் ஒத்தி வைக்கப்பட்டது; வேறோர் நாள் குறிக்கப்பட்டது; அந்த இடைவெளியின்போது, இச்சகம் பேசிடவும், நச்சுக்குழியைப் பச்சை இலை போட்டு மூடி மறைத்திடவும், நாவிலே தேன் தடவிவிடவும், காங்கிரசார் மெத்தத் திறமையுடன் பயன்படுத்திக்கொண்டனர்.

திண்ணைப்பேச்சு, சாவடிப்பேச்சு, கூட்டுறவு அமைப்புகளில் கூடிக்குலவுதல், போன்ற முறைகளைக் காங்கிரஸ் கட்சி தன் வெற்றிக்குப் பயன்படுத்திக் கொண்டது.

இந்த முறைகளைக் கழகம் மேற்கொள்ளவில்லை; முயலவில்லை; காரணம்? மக்கள் எப்படியும், அடக்குமுறையை அவிழ்த்துவிட்ட காங்கிரஸ் கட்சியைத் தோற்கடிப்பார்கள் என்ற நம்பிக்கை.

கழகத் தோழர்கள் மட்டுமல்ல, பொதுமக்களிலே ஒரு பகுதியினரேகூட, சென்ற தேர்தலின்போது காணப்பட்ட புள்ளிவிவரத்தைக்கொண்டு ஒரு தவறான முடிவுக்கு வந்திருந்தனர். வெற்றிபெற்ற சுயேச்சை உறுப்பினர் மறைந்த திரு. வீரப்ப செட்டியாருக்குக் கிடைத்த 24 ஆயிரம் வாக்குகளும், காங்கிரஸ் எதிர்ப்பாளரின் வாக்குகள், ஆகவே இம்முறையும் அந்த 24 ஆயிரம் வாக்குகளும் காங்கிரசுக்கு எதிர்ப்பாகவே இருக்கும், ஆகவே அவை அவ்வளவும் கழகத்துக்குச் சேரும் என்று கணக்கிட்டனர்.

அந்தக்கணக்கு பொய்த்துவிடுமா என்பதுபற்றிய எண்ணம்கூட எழவில்லை; அவ்வளவு நிச்சயமாக இருந்துவிட்டோம். தேர்தல் முடிவு, அந்தக் கணக்கு தவறு என்பதைக் காட்டிவிட்டது; அந்த வாக்குகளைக் காங்கிரஸ் கட்சி பெற்றுக்கொள்ள எல்லா முறைகளையும் பயன்படுத்திக்கொண்டது. அந்த வாக்குகள் நம்மை விட்டுவிட்டு வேறுஎங்கும் போய்விடாது என்று எண்ணினோம்; தோல்வி கண்டோம்.

இவற்றை நான் கூறுவதன் காரணம், தம்பி! தோல்வி எதிர்பார்த்ததுதான், என்று வாதாட அல்ல; வெற்றி நிச்சயம் என்று அதிக அளவு நம்பிக்கையை வளர்த்துக்கொண்டு விட்டோம், தொகுதியின் நிலைமையை நன்கு ஆராயாமல் என்பதைக் காட்டத்தான்.

இன்றுகூட, தனித்தனியாக தருமபுரி தொகுதி மக்களைக்கண்டு,

> இந்தி ஆட்சிமொழி ஆக்கப்படுவது நியாயமா?
>
> மாணவர் கிளர்ச்சியை இரக்கமற்ற விதமாகத் தாக்கித் தகர்க்க முற்பட்டது நியாயமா?
>
> அடக்குமுறையை அவிழ்த்து விட்டு 50 பேர் துப்பாக்கிக்குப் பலியாகிடச் செய்தது நியாயமா?

என்று கேட்டால், நியாயம் அல்ல என்றுதான் கூறுவார்கள்.

ஆனால் காங்கிரஸ் பணியாளர் இரண்டுதிங்களாக நடத்திவந்த பிரசாரம், அதற்காக நடப்பது அல்ல இந்தத் தேர்தல் — தருமபுரி தலைநகராக வேண்டுமா வேண்டாமா? தலைநகர் வேண்டும் என்றால், காங்கிரஸ் வெற்றிபெற்றாக வேண்டும், அதற்காகத்தான் இந்தத் தேர்தல் நடத்தப்படுகிறது, என்பதுதான்.

இந்தி ஆட்சிமொழியாவதைக் கண்டிக்கிறோம், அடக்குமுறையைக் கண்டிக்கிறோம், ஆனால் அதே போது தருமபுரி தலைநகராக வேண்டும் என்றும் விரும்புகிறோம், அதற்காகவே காங்கிரசுக்கு ஓட்டுப் போடுகிறோம் என்ற எண்ணத்துடன், தருமபுரியின் குறிப்பிடத்தக்க புள்ளிகள் முனைந்துநின்று பணியாற்றினர். காங்கிரசின் வெற்றிக்கு அது மிக நல்லவாய்ப்பாக அமைந்தது.

மறுப்பார்கள் காங்கிரஸ் கட்சியினர்: எனினும் நான் மனதார நம்புவதை, எனக்கு அறிவிக்கப்பட்டதை நான் சொல்லுகிறேன், காங்கிரசுக்கு எதிராகப் பணியாற்ற முனைபவர்கள், பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்படுவார்கள் என்ற திண்ணைப் பேச்சு, தருமபுரித் தொகுதியில் மிக வேகமாகப்பரவிற்று.

அமைச்சர்களோ, தரமுள்ள தலைவர்களோ இந்தத் தவறான பிரசாரம் செய்தார்கள் என்று நான் கூறவில்லை. ஆனால் காங்கிரசுக்கு ஓட்டுதிரட்டச் சென்ற பணியாளர்கள், அதிக அளவில் அரசியல் தெளிவில்லாதாரிடம் இந்த அச்சம் எழச்செய்துவிட்டிருந்தனர் என்று அறிகிறேன்.

> கருணாநிதியைப் பார்க்கிறீர்களல்லவா? வழக்கு கூடப் போடாமல் உள்ளே பிடித்து அடைத்துவிட்டார்கள், பாதுகாப்புச் சட்டப்படி!

என்று பேசி, பலருக்கு உண்மைதானே! ஒரு பெரிய கட்சியின் பொருளாளருக்கே இந்தக் கதி என்றால் நாம் காங்கிரசை எதிர்த்தால், என்னதான் செய்யமாட்டார்கள்! நமக்கேன் வீண் வம்பு! காங்கிரசுக்கே வேலை செய்வோம்! என்ற எண்ணம் எழுந்தது என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

> அடக்கு முறை கண்டு அருவருப்பும் ஆத்திரமும் எழுவது போலவே, சமூகத்தில் ஒரு பகுதியிருக்கு அச்சம் ஏற்பட்டுவிடுவது இயற்கை.

இந்த அச்சம் காரணமாகப் பலர் காங்கிரசுக்கு ஓட்டுத் திரட்டும் வேலையில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டார்கள் என்றும் எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

இவற்றைக் கூறும் நான், ஆகவே தருமபுரியில் நாம் தோற்றது வியப்பல்ல என்று வாதாடவில்லை; இந்த நிலைமைகளை மீறி நாம் பணிபுரிந்து வெற்றி பெற்றிருக்கவேண்டும். கழகத்தின் பணி, சூது சூழ்ச்சிகளை முறியடிக்கத் தக்கதானதாக வலிவு பெற்றாக வேண்டும். தருமபுரித் தோல்வி இந்தப் பாடத்தைத் தான் நமக்கு அளிக்கவேண்டும்.

தம்பி! மகனை இழந்த மாதா மனம் நொந்து கதறிக் கிடக்கிறார்கள். கணவனை இழந்த காரிகை கண்ணீர் வடிக்கிறாள்; அண்ணனை இழந்த தம்பி புரண்டு அழுகிறான்! இத்தனைக்கும் காரணமான அடக்கு முறையை அவிழ்த்துவிட்ட ஆட்சியின் பொறுப்பினை ஏற்றுக் கொண்டுள்ளகட்சி தேர்தலிலே வெற்றிபெறுகிறது

என்றால், இது வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவது போன்றதல்லவா, இது நடந்துவிட்டதே தருமபுரியில்!!

"சுட்டோம்! சுடுவோம்!" என்று ஆட்சியினர் பரித்தாலும் வியப்பில்லையே!

சுட்டோம், ஓட்டளித்தனர் என்று வாதாடிடவும் முனைவரே வன்கணாளர்கள். எதைஎதையோ எண்ணிக் கொண்டு, தருமபுரி மக்கள் நடந்துகொண்ட போக்கு ஆட்சியாளர்களுக்கு, நாம் எப்படியும் நடக்கலாம், எதையும் செய்யலாம், எத்தனை முறையும் சுடலாம். எத்தனை பிணமும் விழலாம், யார் என்ன கேட்க முடியும் என்ற எண்ணத்தை அல்லவா உண்டாக்கி விடும். தோற்றது கழகமா! இல்லையே! அடக்கு முறைக்கு ஆளான மக்களின் இதயக் குமுறலை அல்லவா, இந்தத் தேர்தல் தோல்வி, பொருளற்றதாக்கி விட்டது. நல்லாட்சிக்கான முயற்சிக்கல்லவா பலமான அடி விழுந்து விட்டது!

வீழ்ந்துபட்ட மக்களின் சார்பில் நின்றோம், நம்மை வீழ்த்தி விட்டார்கள். வேதனைப்பட்டவர்களின் துயர் துடைக்க முனைந்தோம், தோற்கடித்து விட்டார்கள். இந்தத் தோல்வி, விழிப்புற்ற தமிழர்களுக்கன்றோ பெருந் தோல்வி என்றாகி விட்டது. தேம்பித் தவித்திடும் தமிழ்த்தாயே! உன் கண்ணீரைத் துடைத்து, நீதியை வெற்றி பெறச் செய்ய முடியாமற் போய் விட்டது. என்னை மன்னித்துவிடு! என்றன்றோ நாம் ஒவ்வொருவரும் மண்டியிட்டு முறையிட்டுக்கொள்ள வேண்டி ஏற்பட்டுவிட்டது.

மகனே, மனம் தளர்ந்து போகக்கூடாது. நீதியின் பக்கம் நின்றாய், மகிழ்ச்சி! எனக்காகப் பரிந்து பேசிப் பணியாற்றினாய், பெருமைப்படுகிறேன். உன் வல்லமை வளரும், தோல்வி வெற்றிக்கு வழி அமைக்கும் என்று கூறித்தமிழ்த்தாய் நம்மைத் தேற்றுவாள் என்பது உறுதி.

நியாயம் சில வேளைகளில் வெற்றிபெருமற் போய் விடக்கூடும், அதனாலேயே நியாயத்தின் பக்கம் நிற்கத் தேவையில்லை என்ற முடிவுக்கு அறிவாளர் எவரும் வரமாட்டார்கள். நியாயம் வெற்றி பெறத் தக்க விதமாக உழைப்பதற்கான வலிவினைத் திரட்டிக் கொள்வோம் என்ற உறுதியைப் பெறுவதே தீரர் கடன்.

நஞ்சு கொடுத்து சாக்ரடீசைச் சாகடித்துவிட்டதாலேயே, சாக்ரடீசின் கொள்கையைச் சாகடித்துவிட முடிந்ததா! இரண்டு அங்குல நீளமே உள்ள தேள், கொட்டினால் ஆறடி ஆள்கூடத் துடிதுடிக்கிறான்; அதனாலேயே ஆளைவிடத் தேள் வலிவுள்ளது! என்றாகி விடுமா; ஆளிடம் அந்தத் தேள் சிக்கவில்லை, கொட்டிக் கொண்டிருக்கிறது என்பதுதானே உண்மை நிலை. தருமபுரியில் கழகத்தைத் தோற்கடித்துவிட்டதாலேயே காங்கிரசுக்கு எதிராகத் திரண்டு கொண்டிருக்கும் எதிர்ப்பும், அந்த எதிர்ப்பை உண்டாக்கிக்கொடுக்கும் மக்களின் எழுச்சியும் மடிந்துவிட்டது என்றாகிவிடாது.

தருமபுரியில் பெற்ற வெற்றி காரணமாகக் காங்கிரஸ் கட்சி தனது வல்லமைபற்றி மிக அதிகமான கணக்குப் போட்டுக்கொள்ளுமானால் அது நமக்கு நல்லதுதான். தொடர்ந்து தவறுகளைச் செய்யவும், மக்களின் மனக்கொதிப்பை அதிகமாக்கக்கூடிய நடவடிக்கைகளில் ஈடுபடவும், அடக்குமுறையை அவிழ்த்துவிடுதலிலே சுவை காணவும், தனது ஊழலாட்சியைத் திருத்திக்கொள்ளாதிருக்கவும், துணிந்துவிடும். அந்தக்கட்டம் வேகமாக வளரும்போது, இதுவரை அக்கறையற்று இருந்துவந்த மக்களும் சீறி எழுவார்கள்; ஆசைக்கு ஆட்பட்டு அநியாயத்துக்குத் துணைபோனவர்களும் தமது தவற்றினை உணர்ந்து நீதியின்பக்கம் நிற்பார்கள்; அஃது காங்கிராட்சியை வீழ்த்தும் வலிவை மக்களுக்கு அளித்திடும்.

அந்த நம்பிக்கையுடன் கழகம் பணியாற்றிவரும்; தருமபுரித் தோல்வி அந்தப் பணியின் தரத்தையும் வேகத்தையும் அதிகமாக்கிவிடுமேயன்றி துவண்டிடச் செய்யாது, என்பதனையும் நான் மறந்திடவில்லை.

என்ன கொடுமை செய்தாலும் நமக்குத்தான் 'ஓட்டு' என்ற எண்ணம் காங்கிரஸ் கட்சிக்குத் தடித்துவிடச் செய்கிறது தருமபுரி.

நமக்கோ, உன் வலிவு போதாது, வளரவேண்டும்; முறை செம்மைப் படுத்தப்படவேண்டும்; முயற்சியில் புதுமுறுக்கு ஏறவேண்டும், உண்மைக்காகப் பரிங் பேசினால்மட்டும் போதாது, உண்மை வெற்றி பெறத் தக்கவிதமான வலிவு உண்மைக்குக் கிடைத்திட வழி கண்டாகவேண்டும் என்ற பாடத்தைத் தருகிறது.

வெற்றி எந்த நேரத்தில் எந்தக் கட்சிக்குக் கிட்டுகிறதோ, அந்தக் கட்சியை வலிவுள்ள கட்சி என்று எண்ணிக்கொள்வதும், வலிவு இருக்கிற காரணத்தாலேயே அது நியாயமான கட்சி என்று எண்ணிக் கொள்வதும் கூர்த்தமதி படைத்தோரின் போக்கல்ல; தெளிவற்றோர் பெற்றிடும் மனமயக்கம்.

கழகம் நடாத்துவோர், வலிவுள்ள கட்சியில் தஞ்சம்புகுந்து தகத்தகாயம் பெற முனைந்தவர்கள் அல்ல; சாதாரண கட்சியை வலிவுள்ளதாக்கியவர்கள்! ஒளி உள்ள இடம் ஓடி வெளிச்சம் போட்டுக் கொண்டவர்கள் அல்ல, கழகத்தினர்; இருண்ட இடத்தில் ஒளிஎழ திருவிளக்கு ஏற்றிவைத்தவர்கள்; எங்கே சென்றால் தேர்தலில் வெற்றி கிடைக்கும் என்று அலைந்து அதற்கோர் இடம் கண்டுபிடித்தவர்களல்ல, தேர்தலில் வெற்றி கிடைக்கத்தக்க வலிவினை உழைத்துப் பெற்றிடும் உறுதிகொண்டு பணிபுரிவோர். கழகத் தோழர்கள் விளைந்த காட்டுக்குருவிகளுமல்ல, மரம் பழுத்தது கண்டு பறந்தோடிவரும் வௌவாலும் அல்ல, அரைக்க அரைக்க மணம் எழுப்பும் சந்தனம் போன்ற இயல்பினர். தருமபுரித் தோல்வியை நமது சிந்தனையைக் கிளறி, முறைகளைச் செம்மைப் படுத்தும், ஓர் வாய்ப்பாக மாற்றிட வல்லவரே, கழகத் தோழர்கள்.

இந்த நமது இயல்பை மேலும் விறுவிறுப்பான தாக்கிட, வெற்றிபெற்ற காங்கிரசார் ஏவிடும் தூற்றலையும் பயன்படுத்திக்கொள்வோம். வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சிவிட்டனர்; ஆம்! குருதியைத் துடைத்துக் கொண்டு, தொடர்ந்து பணியாற்றிவருவோம். துயரம் காரிருளெனக் கப்பிக்கொண்டிருக்கும், உணருகிறேன்; ஆனால் தம்பி! விடிவதற்கு முன்பு கருக்கல் அதிகமாகத்தான் இருக்கும். பொழுது புலரும், பொறுத்துக் கொள்; பணியாற்று.

அண்ணன்,

அண்ணாதுரை

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.